# நோக்கு



வைகாசி - ஆனி - ஆடி 1994

விலை:- 15-00

# விளக்கு

வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்

அகல்: 01 | பவ-வை ஆனி-ஆடி ★ திருவள்ளுவர் ஆண்டு: 2024 ★ மே-யூன் யூலை 1994 | சுடர்: 06


## தெளிவான பாதையின் வழிகாட்டியானவன்

துணைவேந்தர் துரைராசா மீளா நித்திரைக்கு ஆளாகி விட்டார். மாணவர் சமுதாயம் துயரிலே தோய்கின்றது, பல்கலைக் கழகம் பதறித்துடிக்கிறது, கல்வி உலகும் கலங்கித்தவிக்கின்றது, தமிழீழம் முழுவதுமே தடுமாறி நிற்கின்றது.

பிறந்தவர் ஒருநாள் இறந்தே தீருவர் என்ற இயற்கை நியதியை அறிந்த பின்னரும் ஏன் இந்தக் கண்ணீர்? ஏன் இந்தக் கலக்கம்?

இப்பேராசான் பெற்ற பட்டங்களை, வேறும் பலர் பெற்றிருந்தார்கள். விரிவுரையாளராக, பீடாதிபதியாக, பேராசிரியராக, துணைவேந்தராக இவரைப்போற் படிப்படியாக உயர்ந்தவர்கள் வேறும் பலருளர்.

ஆனால் அந்தப் பலரிலிருந்து பேராசான் துரைராசா வேறுபட்டு நின்றார், மாறுபட்டு உயர்ந்தார்.

தான் சார்ந்த கல்வித்துறையின் அதி உச்சத்தை அவர் எட்டினார். ஆனால் அந்தச்சாதனை அவருக்குக் கர்வத்தைக் கொடுக்கவில்லை; கடமையை நினைவூட்டியது.

பட்டங்களை வைத்துக்கொண்டு தம்பட்டமடிக்காமல் அவை கிடைப்பதற்குக் காரணமாகவிருந்த அறிவையும் ஆராய்ச்சியையும் தன் நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தினார்.

பதவியைப் பணமீட்டும் வாய்ப்பாகக் கொள்ளாமல், பல்லாற்றாலும் மக்களுக்கு உதவும் கருவியாகக் கையாண்டார்.

பதவியில் அவர் உயர, உயர, பண்பும் பணிவும் அவருட் கலந்து மலர்ந்தன.

வெளிநாடுகளுக்கு அவர் சென்றதுண்டு; தன் வியத்தகு ஆற்றலை வெளிக்காட்டியதுமுண்டு. ஆனால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உல்லாச வாழ்க்கைவாழ அவர் எண்ணியதில்லை.

அங்கெல்லாம் திரட்டிய அறிவையும் தேக்கிய அனுபவத்தையும் தன்தாயக மாணவர்க்குத் தயங்காது பகிர்ந்தளித்தார்.

உலகப்புகழ் பெற்ற இக்கல்விமானின் தலைமையில் இருந்த காரணத்தால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உலகின் கணிப்பில் உயரத்தொடங்கியது.

நெருக்கடிகள் பல எதிர்வந்த போது, பல்கலைக் கழகம் உருக்குலைந்து சிதையாமல், அதைக் கட்டுக்கோப்புடன் கட்டியெழுப்பிய அவர், புதிய துறைகளை உருவாக்கி அவற்றின் துரித வளர்ச்சிக்குத் துணையாகவும் நின்றார்.

காட்சிக்கு எளியனாய், கடுஞ் சொல்லன் அல்லனாய், கல்விச் சிம்மாசனத்திலிருந்து ஆட்சி புரிந்த இத் துணைவேந்தர், கற்களும் முட்களும் பள்ளமும் வெள்ளமும் நிறைந்த தமிழீழ வீதிகளிலே துவிச்சக்கர வண்டியிலே பவனி வந்த துணிவு வேந்தருமாவார்.



நாடி வந்த கடமைகளைச் செய்தவர், தேடிச் சென்றும் பல பல பணிகளைத் தொடர்ந்தார்.

தமிழீழ மக்களின் நிறைவான வாழ்க்கைக்குத் தனிநாடு பெறுவதே சரியான வழியென்று தயங்காது சொன்னவர் அவர். அதனால் நம் மக்களின் அரசியல் விடுதலைக்கும் பொருளியல் வளத்துக்கும் தன் காலத்தையும் சக்தியையும் கவராது வழங்கினார்.

முன்னைய இத் துணைவேந்தரை முன்மாதிரியாகக் கொண்டு நமது கல்விச் சமுதாயம் தன் வாழ்க்கையின் போக்கினை மாற்றியமைத்தால் -

கல்விப் பயிர் செழிக்கும்; பண்புக் கனி கொழிக்கும்; பொருண்மிய மேம்பாடு பொலிந்து சிறக்கும்; இனத்தின் விடுதலை இலகுவிற் கிடைக்கும்; தரணியிற் தமிழீழம் தலை நிமிர்ந்து நிற்கும்.

---

## புலவர்மணி மயில்வாகனனார்

*பழந்தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த பயிற்சியும் புதுமையை நயக்கும் மனப்பாங்கும் இலக்கண வரம்புகளைப் பேணுந் திறனும் மிக்க செந்தமிழ்ச் செல்வர் பண்டிதர் க. மயில்வாகனனாரின் பவள விழாவைத் தமிழ்மணக்கும் பெருவிழாவாக வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தினர் கொண்டாடினர். பைந்தமிழ் வளர்த்த பாவலர்களுள் ஒருவரான முத்தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்களின் பெயரமைந்த அரங்கில், இச் செந்தமிழ்ச் செல்வரின் தமிழ், சமய சமூக சேவைகளைப் பல்கலைக் கழகம், ஆசிரியர் பயிற்லக் கலாசாலை ஆகியவற்றின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஏனைய கல்லூரி அதிபர்கள், கல்விமான்கள், அரச அதிகாரிகள், சமயத்தலைவர்கள் போன்றோர் பாராட்டிப் பேசினர். பண்டிதர் அவர்களின் பன்முகப் பணிகளையும் ஆற்றல்களையும் வியந்துரைக்கும் பவள விழா ஏடும், பண்டிதரின் ஆக்கங்களைக் கொண்ட ''தமிழமுதம்'' நூலும் விழாவில் வெளியிடப்பட்டன. பொன்னாடை போர்த்திப் பொற்கிழியும் அளித்த தமிழ்ச் சங்கத்தினர் அவருக்குப் 'புலவர்மணி' என்ற விருதையும் வழங்கிக் கௌரவித்தனர் தமிழாசிரியர் ஒருவருக்குக் கிடைத்த இச் சிறப்புக்களை நினைந்து 'விளக்கு' பெருமையடைகின்றது*

---

# வளர்ச்சிப் பாதையில்....

பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளைச் சரியாக இனங்கண்டு, அவற்றை நீக்குவதற்குக் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் அதிபர்களும் ஆசிரியர்களும் கூட்டாக எடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை இலகுவாக்கி விரைவாக்கும். கடமையுணர்ச்சியுடைய அதிகாரிகள், சுற்றுநிருபங்களிற் தங்கியிருக்காமல், களத்தில் இறங்கிச் சுறுசுறுப்புடன் செயற்பட்டு வருவது அனைவருக்கும் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டும் எனக் கருதுகின்றோம்.

எஸ். சுப்பிரமணியம்

கடந்த சில ஆண்டுகளாக யாழ் மாவட்டக் கல்வியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி நிலை பற்றிப் பலராலும் விமர்சிக்கப்பட்டு வருகின்றது. தனியார் கல்வி முறைமை வளர்ச்சியடைந்தமை, தனியார் கல்வி முறைமையைக் கட்டுப்படுத்தியமை, பொருத்தமற்ற பாடசாலைக் கல்வி முறைமை, அரசின் போர் நடவடிக்கைகள், கல்வி, பொருளாதாரத்தடைகள் என்றவாறாகப் பல காரணங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இவற்றுள் எது சரி எது பிழை, எது எவ்வளவு பொருத்தமானது என்பது சரியாக மதிப்பிடப்படவில்லை.

இருப்பினும் கல்வி முன்னேற்றத்தை விரும்பும் எவரும் இக்கருத்துக்களால் சஞ்சலமடையாமலிருக்கமுடியாது. இதன் தொடர்பில் கடந்த 3 மாதமாக யாழ் மாவட்டத்தில் எடுக்கப்படும் சில முன்னேற்ற நடவடிக்கைகள் நம்பிக்கையூட்டுவனவாகவுள்ளன. இந்நடவடிக்கைகள் பற்றிப் பொதுமக்களும், பாடசாலைச் சமூகத்தினரும், மாணவரும் அறிந்து கொள்வதன் மூலம் பொருத்தமான ஊக்குவிப்புகளைச் செய்வதோடு, இசைவாக்கம் பெறவும் முடியும்; கல்வியை முன்னேற்றப்பாதையில் முன் எடுத்துச் செல்வதில் அவர்கள் பங்களிக்கவும் முடியும்.

## கல்வி முன்னேற்றத்துக்காக எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகள்

*1- கல்விப் பெறுபேற்றுக் குறைவுக்கான காரணிகளைக் கண்டறிதல்:*



இதன் தொடர்பில் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூக நிறுவனங்களுடனான கலந்துரையாடல்கள் ஆலோசனைகள், கருத்துக் கணிப்புகள் மேற் கொள்ளப்பட்டுப் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

## 1 திட்டமிட்ட பாடசாலை மேற்பார்வைத் திட்டம்

மேற்பார்வை செய்யப்படவேண்டிய பாடசாலைகள் எவை எனத் தீர்மானிக்கப்பட்டு, மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. பாடசாலை வேலைகளை மதிப்பிடுவதற்கான மதிப்பீட்டுப் படிவம் வடிவமைக்கப்பட்டது. இதன் குறிக்கோள்கள் பின்வருமாறு இருந்தன.

1. பாடசாலையில் அபிவிருத்தி, சீர் திருத்தம் செய்ய வேண்டிய விடயப்பரப்புகளைத் துல்லியமாக மதிப்பிடலும், அறிக்கைப்படுத்தலும்.
2. அறிக்கையினடிப்படையில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளை, குறைகளை அவற்றுக்கு பொறுப்பான வேலைப் பகுதிகளுக்கு அல்லது அதிகாரிகளுக்குப் பொறுப்பளித்தல்.
3. அவ்வதிகாரிகள் அப் பிரச்சினைகளை அல்லது குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கான திட்டங்களைத் தீட்டிப் பிரச்சினைகளைத் தீர்த்தல்; குறைபாடுகளை நீக்குதல்.

பின்வருவனவற்றை 5 புள்ளித்திட்ட அடிப்படையிலே மதிப்பிடக் கூடிய வகையில் மதிப்பீட்டுப் படிவம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**1- பாடசாலையின் முன்னாயத்த நிலை:**

1• முகாமைத்துவம் தொடர்பானவை

1 - 1 மாணவரை உரிய காலத்திற் சேர்த்தல்.

1 - 2 வரவு இடாப்புகள் முறையாகப் பேணல்

1 - 3 பொருத்தமான நேரசூசி ஏற்பாடுகள்.

1 - 4 முறையான ஆசிரியவளப் பங்கீடு

1 - 5 துணைச்சாதனங்கள், கருவி, உபகரணங்களுக்கான ஏற்பாடு.

1 - 6 முகாமைத்துவக் கட்டமைப்பு, கடமைகள் பகிர்ந்தளிப்பு

1 - 7 வசதிகள் சேவைகள் கட்டணப் பங்கீடு

1 - 8 பதிவுகளை முறையாகப் பேணல்

- 2 ஆசிரியர்கள் தொடர்பானவை

2 - 1 பாடத்திட்டம் வேலைத் திட்டம், பாடக் குறிப்புகளை முறையாகப்பேணல்

2 - 2 பாடக் குறிப்புக்குஅமைய துணைச் சாதனங்களைக் கொண்டிருத்தல்

2 - 3 கற்பித்தல் நுட்பத்தை முறையாகப் பின்பற்றுதல்

2 - 4 மதிப்பீடுகளும்- பரிகார நடவடிக்கைகளும்.

2 - 5 இணை பாடவிதான செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துதல்

2 - 6 ஆசிரியரின் கற்பித்தல் தொடர்பான புதுமுயற்சிகள்

2 - 7 முகாமைத்துவ பணிகளிற் பங்களிப்புகள்

2 - 8 பதிவுகளை உரிய முறையிற் பேணுதல்

2 - 9 பயிற்சித் திட்டங்களைப் பயன்படுத்துதல்

2 - 10 ஆசிரியர் வாண்மை

2 - 11 ஆசிரியர் வளத் தேவை

3. மாணவர் தொடர்பானவை

3 - 1 மாணவர் பாடசாலையில் சேர்வதற்கான ஏற்பாடுகள்

3 - 2 மாணவர் வரவொழுங்கைப் பின்பற்றுதல்

3 - 3 கற்பதற்கான முன்னாயத்த நிலை

3 - 4 மாணவர் இடைவிலகல்

3 - 5 மாணவர் ஒழுக்கம்

3 - 6 கற்றலில் ஈடுபாடு

3 - 7 பரிகாரச் செயற்பாடுகளில் ஈடுபாடு

3 - 8 இணை பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபாடு

3 - 9 மாணவர் சேம நலனுக்கான ஏற்பாடுகள்

4. பௌதிக வளம் தொடர்பானவை

4 - 1 தளபாட வசதிகள்

4 - 2 அடிப்படை வசதிகள்

4 - 3 பாடநூல் வசதிகள்

4 - 4 செயல் முறைக்கற்பித்தலுக்கான வசதிகள்

4 - 5 நூலகவசதி

4 - 6 கருவி உபகரணங்களைப் பேணல், பயன்படுத்துதல்

5 - சமூகம் தொடர்பானவை

5 - 1 பாடசாலை அபிவிருத்திச் சபைகளின் பங்களிப்புகள்

5 - 2 சமூக அறிவூட்டல் நடவடிக்கைகள்

5 - 3 பெற்றோர் ஆசிரியர் ஈடுபாடு

5 - 4 முறைசாராக் கல்விச் செயற்பாடுகள்

மேற்கூறிய அம்சங்களில் பாடசாலைகள் மதிப்பீட்டுக்குள்ளாக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன.



அவையாவன- (அ) பாடசாலை மட்டத்தில்

மதிப்பீட்டறிக்கைகள் தொகுக்கப்பட்டுப் பாடசாலையில் மேறகொள்ள வேண்டிய விடயங்கள் அதிபரினதும், ஆசிரியரினதும், கவனத்துக்கு உடனேயே கொண்டு வரப்பட்டுள்ளன. இனங் காணப்பட்ட நிறைவுகள், குறைவுகள் அவற்றிற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டு குறைகளை நிறைவு செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய எழுத்து மூலஅறிக்கைகள் பேணப்படுகின்றன. பரிகரிப்பு முன்னேற்றங்கள் பற்றிய அறிக்கைகள் விரைவிற் பெறப்பட்டுக் கண்காணிப்பு தொடரப்படும்.

(ஆ)- கோட்டமட்டத்தில்

வலய மேற்பார்வையால் கண்டறியப்பட்ட குறைகள். ஒவ்வொரு பாடசாலை மட்டத்திலும் எடுக்க வேண்டிய பொது நிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகள் எவையென வகைப்படுத்தப்பட்டுப் பி. க. பணிப்பாளருக்கு எழுத்தில் தெரியப்படுத்தப்படும் அவற்றின் முன்னேற்றம் பற்றி ஒவ்வொரு மாத இறுதியிலும் கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள், வலயப்பணிப்பாளருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அவை கண்காணிக்கப்பட்டு பரிகாரம் மேற்கொள்ளப்படும்.

இ: முதன்மையாசிரியருக்கானவை

ஒவ்வொரு பாடசாலையிலும் இனங்காணப்பட்ட கற்றல் கற்பித்தல் தொடர்பான குறைகளை நிவர்த்தி செய்வதில் முதன்மையாசிரியர் பங்களிப்பு முக்கியமாகையால் அப்பாடசாலையில் குறிப்பிட்டபாட ஆசிரியர் வாண்மை விருத்திக்கு எவ்வாறு உதவ வேண்டுமென்பது தொடர்பான ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் விசேட பாடங்களுக்கான உ. க. பணிப்பாளர்களினால் முதன்மையாசிரியருக்கு வழங்கப்படும். இதனால் முதன்மையாசிரியர் சேவை தேவைப்படும் பாடசாலைக்கும், ஆசிரியருக்கும் திட்டமிட்டபடி அதை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ.) வலய மட்டத்துக்கானவை

பாடசாலை மட்டத்தில் இனங்காணப்பட்ட பிரச்சினைகள், குறைகளினடிப்படையில் வலயப்பணிமனை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படும்.

1) பாடசாலை மேற்பார்வை
2) கல்வித் திட்டமிடல்
3) புள்ளி விபரம் பேணல்
4) கண்காணிப்பும்— பரிகரிப்பும்
5) முதன்மை யாசிரியர்கள் பயிறசி ஏற்பாடுகள், ஒழுங்கமைத்தல்.
6) அதிபர் பயிற்சித் திட்டங்கள்
7) ஆசிரியர் பயிற்சித் திட்டங்கள்
8) வளப்பங்கீட்டுத் திட்டங்கள்
9) வள விருத்திகள்
10 புது முயற்சிகள்

போன்ற பல அம்சங்களில் தற்சமயம் ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. பல திட்டங்கள் நடைமுறைக்கும், சில திட்டங்கள் பரீட்சார்த்தமாகவும் விடப்பட்டுள்ளன.

மாவட்டக்கல்வி அபிவிருத்திக்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி எல்லோரும் தெரிந்து கொள்வதற்கும் உரிய பங்களிப்பைச் செய்வதற்கும் வசதியாக அவை சம்பந்தமான தகவல்களும் விளக்கங்களும் காலத்துக்குக் காலம் ''விளக்கு'' இதழில் இடம்பெறும். ஆசிரியர்களைப் பொறுத்தளவில் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெறுவதால்.

★ நிறைவான பங்களிப்பைச் செய்யமுடியும்

★ வீணான கிலேசமடையத் தேவையில்லை

★ தமது வாண்மையை விருத்தி செய்து கொள்ளலாம்

★ பெற்றோர்கள் என்ற ரீதியில் ஆக்க பூர்வமாகச் செயற்படலாம்

★ தப்பபிப்பிராயங்களை நீக்கிக்கொள்ளலாம்

★ வீண் செலவுகளைக் குறைக்கலாம்.

— என நம்புகின்றோம்.

---

## சேவை நலம்

*அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையின் அதிபரான திரு க. பாலசிங்கம் தன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். கணிதத்தைச் சுவையான முறையிற் கற்பிக்கும் ஆற்றல் வாய்ந்த இவர், கற்பித்தலை எப்போதும் நேசிப்பவர். கனகரத்தினம் ம. ம. வி. யிற் பிரதி அதிபராகப் பணியாற்றிய அனுபவத்துடன், பார்வதி வித்தியாசாலையின் அதிபரான இவர், தன் நேர்மையான உழைப்பாலும் சிறந்த வழிகாட்டலாலும் கல்வி, விளையாட்டு, சாரணியம் முதலிய துறைகளில் இப்பாடசாலை முன்னேறுவதற்கு உறுதுணையாகவிருந்தார். இராணுவச் செயற்பாடுகளாற் சேதமுற்ற பாடசாலைக் கட்டடங்களைத் திருத்தி, அகதி மாணவர்களை அணைத்து கல்விச் சுடர் அணையாது காத்த இவர், நீண்ட ஆயுளுடன் சுகமாக வாழ்ந்து ஓய்வுக் காலத்திலும் அப்பணியைத் தொடர வாழ்த்துகின்றோம்.*

---

# சம்பளத் திட்டம்

*1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் அரச ஊழியர்க்கும் ஆசிரியர்களுக்குமான புதிய சம்பளத் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது: 24.12 1992 ல் பொது நிர்வாக அமைச்சு வெளியிட்ட 37/92 ஆம் இலக்கச் சுற்று நிருபத்தில் இந்தச் சம்பளத்திட்ட விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. ஆசிரியர்களின் சம்பளம் மீள்பரிசீலனை செய்யப்பட்டு, உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக எழுந்துள்ள இவ்வேளையில். இப்போதைய சம்பளத் திட்டங்களை அனைவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியம் என்பதற்காகவும், கல்வியையும் பயிற்சியையும் தொடர்ந்து பெற்றுத் தம்மை மேலும் உயர்த்திக் கொள்ள ஆசிரியர்களைத் தூண்டுவதற்காகவும் முக்கியமான விளக்கங்களை இங்கே வெளியிடுகின்றோம்.*

**த. மகாசிவம்**

1. சம்பள உயர்ச்சியின் 60%, 1-1-93 லும் எஞ்சிய 40% 1-7-93 லும் வழங்கப்பட்டது.

2. வாழ்க்கைச் செலவுப்படி - சிறப்பு. 31-12-1992-ம் திகதிக்கு முன்னர் பெற்ற அதே படியை அதிபர்கள் ஆசிரியர்கள் பெறுவர்.

   1-1 93 ம் திகதிக்குப் பின்னர் புதிதாக நியமனம் பெறுவோருக்குப் பின்வரும் அடிப்படையில் வழங்கப்படுகின்றது:

| வருடாந்த ஆரம்ப சம்பளம் | வாழ்க்கை செலவுப்படி |
|---|---|
| 1. ரூபா 33,000/- க்குள் | ரூபா 860/- |
| 2. ரூபா 48, 720/-க்குக் குறைவாகவும் வருடாந்த சம்பள ஏற்றம் ரூபா 1,560 க்குக் குறைவாகவும் | ரூபா 560/- |
| 3. ரூபா 49,200/- க்குக் குறைவானது | ரூபா 300/- |

3. வருடாந்த சம்பள உயர்ச்சி, தடை தாண்டல்
   வருடாந்த சம்பள உயர்ச்சித் திகதி தடைதாண்டல் படிஆகியவற்றில் மாற்றம் ஏதும் இல்லை.

4. இணைந்த படிகள்

பதவி நிலைக் கடமைப் பயணத்திற்குப் பின்வரும் அடிப் படையில் இணைந்த படிகள் வழங்கப்படும்.

| வருடாந்த சம்பளம் | முழுமையான 24 மணிக்கான இணைந்த படிகள் |
|---|---|
| ரூபா 21,960/-க்குக் குறைந்தது | ரூபா 125/- |
| ரூபா 21, 961—33, 720/- | ரூபா 150/- |
| ரூபா 33, 721—64,799/- | ரூபா 200/- |
| ரூபா 64,800 க்கு மேல் | ரூபா 250/- |

5. விதவைகள் / விதுரர்கள் அனாதைகள் ஒய்வூதியக் கழிவு

பின்வரும் அடிப்படையில் மாதாந்தம் சம்பளப் பட்டிய லில் இருந்து கழிக்கப்படும்.

| வருடாந்த சம்பளம் | கழிவு |
|---|---|
| ரூபா 23, 400/- க்கு குறைவானது. | 3% |
| ரூபா 23,401—35, 700/- | 5% |
| ரூபா 35,701க்கு மேல் | 6% |

6. அதிபர்களுக்குரிய மாதாந்தச் சிறப்புப் படி

அதிபர்களுடைய மாதாந்தச் சிறப்புப்படி தை 93 விருந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தேசிய பாடசாலை | —ரூ 375.00 |
| பாடசாலை 1 ஏ பி அல்லது 1 சி | ரூ 300.00 |
| பாடசாலை தரம் 2 | ரூ 225.00 |
| பாடசாலை தரம் 3 | ரூ 150,00 |

7. புகையிரத ஆணைச்சீட்டு

31-12-1992 ம் திகதியில் 1ம்,2ம் வகுப்புப் பயணத்திற் குரிய புகையிரத ஆணைச்சீட்டைப்பெறத்தகுதி பெற்றிருந்தோர் தொடர்ந்தும் அதே ஆணைச்சீட்டைப் பெறலாம். ஏனையோருக் குப் பின்வரும் அடிப்படையிற் பயணச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

| வருடாந்த சம்பளம் | பயண வகுப்பு |
|---|---|
| ரூபா 42, 720/- க்கு மேல் | 1 ஆம் வகுப்பு |
| ரூபா 31, 740—42, 719- | 2 ஆம் வகுப்பு |
| ரூபா 31, 739/- க்கு குறைவானது | 3 ஆம் வகுப்பு |



8. ஒப்பந்த அடிப்படையிலுள்ளவர்ககளின் சம்பளம்

ஓய்வு பெற்றபின் ஒப்பந்த அடிப்படையிற் சேவையாற்றும் ஆசிரியர்களும் 31-12-1992 ம் திகதியிற் பெற்ற சம்பளத்திற்கு ஏற்ற புதிய சம்பளப் படியிலுள்ள சம்பளத்தைப் பெறுவார்கள்.

9. ஓய்வூதியத்தைக் கணக்கிடுதல்

01-01 1993 ஆம் திகதிக்கும் 30-06-1993 ம் திகதிக்கும் இடையில் ஓய்வு பெறுபவர்களின் ஓய்வூதியம் கணக்கிடப்படும் பொழுது அவ்வூழியர் பெற்ற கடைசி மாதச்சம்பளமானது, 30% சம்பள உயர்வும பெற்றதாகக் கருத்திலெடுக்கப்பட்டு (அதாவது 01-07-1993 ம் திகதிய சம்பளத்தின்) அதன் அடிப்படையிலேயே கணிக்கப்படும்.

0. ஓய்வூதிய பணிக்கொடை

ஓய்வூதியப்பணிக்கொடையும் 01-07-1993 ஆம் திகதிய சம் பளத்தின்) அடிப்படையிலேயே கணிக்கப்படும்.

I. A. B.
December - 1994
★
FOUND
INTER
and
FINALS
வகுப்புக்கள் 06-07-1994 முதல்
ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
வட இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி
14, சென்பீற்றர்ஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

## ஆசிரியர் வகை

| ஆசிரியர் வகை | பழைய சம்பளத்திட்டம் | புதிய சம்பளத்திட்டம் |
|---|---|---|
| 1. 1) தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள். 2) தராதரப்பத்திரமுள்ள ஆசிரியர்கள். | 17,280 - 14 X 480-6 X 600 / 27,600 | 24.120 - 14X660 - 6X780 / 38,040 |
| 2. உடற்கல்வி போதனாசிரியர்கள் | 19680 - 9 X 480—8 X 600 / 28,800 | 27.420—9X660—8X780 / 39,600 |
| 3. 1) கனிட்ட பல்கலைக்கழக டிப்புளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்கள். 2) திறந்த பல்கலைக்கழக விஞ்ஞான /கணித டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்கள். | 21,600 - 5X 480—11X600 / 30, 600 | 30,060—5×660—11X780 / 41,940 |
| 4. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள். | 23, 400 - 10 X 600—6X900 / 34,800 | 32.520 - 10X780 - 6X1200 / 47,520 |
| 5. 1) பொது கலைப் பட்டதாரிகள். 2) யாழ். பல்கலைக்கழக நுண்கலை டிப்புளோமா 3) பல் தொழில் நுட்பக் கல்லூரியில் (4 வருட) வர்த்தக டிப்புளோமா. | 27.000—4X600—10X900 —1X1200—39,600 | 37.200-4X780—10X1200 1X1560-53,880 |
| 6. 1) சிறப்புப் பட்டதாரிகள் 2) விஞ்ஞானம்/ கணிதம் ஆங்கிலம்/ விவசாய/கல்வி பாடத்தை பட்டப்படிப்பிற்கான பாடமாகக் கொண்ட பட்டதாரிகள். 3) பொது கலைப்பட்டதாரிகள், பட்டப்படிப்பின் பின் கல்வி டிப்புளோமாவுடன். | 28,800—1X600—10X900 / 3X1200—42,000 | 39,540—1X780—10X1200 / 3X1560—57,000 |

| | | |
|---|---|---|
| 7. 1) பட்டப்பின் கல்வி டிப்புளோமாப் பட்டத்தையுடைய சிறப்புப்பட்டதாரிகள். 2) பட்டப்பின் டிப்புளோமா (கல்வி) பட்டத்தையுடைய விஞ்ஞானம்/ கணிதம்/ ஆங்கிலம்1 விவசாயம் கல்வி பாடத்தை பட்டப் பாடமாகக் கொண்ட பட்டதாரிகள். | 31,200—8X900—10X1200<br>50,400 | 42,720—8X1200—10X1560<br>67,920 |
| இலங்கை அதிபர் சேவை தரம்- 3 | 27,000—4X600—9X900<br>37,500 | 37,200—4X720-9X1200<br>51,120 |
| இலங்கை அதிபர் சேவை தரம் - 2 | 31,200—8X900—1X1200<br>39,600 | 42,72-0-8X 12,001×1560<br>53,800 |
| இலங்கை அதிபர் சேவை தரம் - 1 | 33,000—6X900—3X1200<br>42,000 | 45,120—6X1200—8X1560<br>57,000 |

# ஆசிரியரும் தொழில்சார் உளநிறைவும்

ஆசிரியரின் உளநிறைவு, தொழில் ஆற்றுகை வினைத்திறனின் "விசை" என்று விளக்கப்படும். ஆசிரியரின் மன நிலையே வகுப்பறையின் "கவிநிலை" யாகின்றது. மாணவர்மானுடப்படுதலும் எதிர் மானுடப்படுதலும் ஆசிரியரின் தொழில்திருத்தியுடன் இணைந்துள்ளன.

தொழில் ஆற்றுகையின் கூட்டுமொத்தமான உணர்வுகளின் வழியாக எழுவதே "தொழில்சார் உளநிறைவு" அல்லது "வேலைத்திருத்தி" எனப்படும். தொழிலின் பண்பு, தொழில்செய்யும் சூழலின் இயல்பு, தொழில் தொடர்பான சமூக விழுமியங்கள், கிடைக்கப்பெறும் ஊதியம், தொழில் அமைப்பினுள்ளே கிடைக்கப்பெறும் உள்ளார்ந்த மேல்நோக்கிய அசைவு, மேற்பார்வை, மேற்பார்வை செய்வோரின், தகுதிகள், தொழில்சார் ஊக்கல்,ஆக்கத்திறன் வெளிப்பாட்டுக்குரிய வாய்ப்புக்கள் முதலியவற்றின் கூட்டுமொத்தமான உணர்வுகளின் வழியாகவே தொழில்சார் உள நிறைவு உருவாக்கப்படுகிறது. அல்லது குலைக்கப்படுகிறது என்பது தொல்சீர் உளவியற் கருத்து.

*உள்ளம் மகிழ்ச்சியுடனும் திருத்தியுடனும் நிறைந்திருந்தால் ஆசிரியர்கள் மேலும் சிறப்பாகவும் நிறைவான பயன் கிடைக்கும்படியும் தம்பணியை ஆற்றுவர். ஆசிரியர்களுக்கு "உள்ள நிறைவை" ஏற்படுத்தும் பல்வேறு சக்திகள் சம்பந்தமான கோட்பாடுகள் விளக்கம் பெறுகின்றன.*

## உள எதிர்பார்ப்புக் கோட்பாடு:

தொழில்சார் உளநிறைவு தொடர்பாக உருவாக்கப்பட்ட நவீன உளவியல் அணுகுமுறைகளுள் ஒன்றாக "உள எதிர்பார்ப்புக் கோட்பாடு" (Expectancy Theory) விளங்குகிறது.ஓர் ஆசிரியரது உளஎதிர்பார்ப்புக்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்படு

கலாநிதி சபா. ஜெயராசா.

கின்றனவோ அந்த அளவுக்குத் தொழில்சார் உளநிறைவும் மகிழ்ச்சியும் ஏற்படும் என்ற நிலைப்பாட்டை இந்தக்கோட்பாடு வலியுறுத்துகின்றது.

ஆசிரியருக்குரிய எதிர்பார்ப்புக்கள் அவர் வாழும் சமூக அடுக்கமைப்புச் செல்வாக்கினுக்கு உட்படுகின்றன. சமூக எதிர்பார்ப்பின் அழுத்தங்கள் ஆசிரியரது எதிர்பார்ப்புக்களைத் தீர்மானிப்பதால், ஆசிரியர் என்ற ''சமூகமனிதர்'' பற்றிய சிந்தனைகளை மேலும் குவியப்படுத்த வேண்டியுள்ளது.

இருகாரணிக் கோட்பாடு:
(Two Factor Theory)

ஆசிரியரின் தொழில் சார் உளநிறைவை விளக்கவந்த பிறிதோர் கோட்பாடாக இருகாரணிக் கோட்பாடு விளங்குகின்றது. இக்கோட்பாடு, நடைமுறை அனுபவங்களுடன் பிரச்சினைகளை அணுகி நிற்கின்றது. உளவிருப்பை ஏற்படுத்தும் காரணிகளையும் உள வெறுப்பை ஏற்படுத்தும் காரணிகளையும் ஒப்பு நோக்கித் திருத்தியைக் கண்டறியும் அணுகு முறையாக இருகாரணிக்கோட்பாடு விளங்குகின்றது.

விருப்புக் காரணிகளாக, தொழில் தொடர்பான மதிப்பு கணிப்பு, தன்னியல் நிறைவு, வழங்கப்படும் பொறுப்புக்கள், சுயமுன்னேற்றம் முதலியவை அமைகின்றன. வெறுப்புக்காரணிகளாக மேல் உத்தியோகத்தரது எதிர் நடவடிக்கைகள், மேற்பார்வை, மேலதிக வேலைகள் சுமத்தப்படல், வெகுமதியின்றி மேலதிக நேரம் வேலை செய்யுமாறு வற்புறுத்தப்படல் முதலியவை அமைகின்றன. மேற்கூறியவாறு அகமாயும், புறமாயும் நிற்கும் காரணிகளில் ஒப்பு நோக்கல் இரு காரணிக் கோட்பாட்டிலே விளக்கப்படுகின்றது. விருப்புக்காரணிகள் மேலோங்கி நிற்கும் பொழுது தொழில்சார் உளநிறைவு ஏற்படும். வெறுப்புக் காரணிகள் மேலோங்கும் பொழுது தொழில் சார் உளநிறைவு சிதைக்கப்படும்.

ஊக்கற் கண்ணோட்டம்:

ஊக்கலை முதனிலைப்படுத்தும் உளவியலாளர்கள் ஊக்கற் கண்ணோட்டத்தில் ஆசிரியர்களின் தொழில் சார் உளநிறைவை விளக்க முற்படுகின்றார்கள். ஆசிரியர் வினைத்திறனுடன் செயல் புரிவதற்குரிய ஊக்கல் இரண்டு பெரும் மாறிகளினாலே தீர்மானிக்கப்படுகின்றது முயற்சியும் வெகுமதியும் பற்றிய நிகழ்தகவு முதலாவது பெரும் மாறியாகும். இதில் முயற்சி அகவயமானதாயும் வெகுமதி கருவி சார்ந்ததாயும் அமையும். நடத்தை உருவாக்கத்தில் வெகுமதி என்பது மீள வலியுறுத்தியாக இருத்தல் நோக்கத்தக்கது.

ஊக்கல் தொடர்பான இரண்டாவது மாறியாக அமைவது 'விழுமியம்'' ஆகும். ஆசிரியத்



தொழில் ஒருவருக்குத் தருகின்ற பாதுகாப்பு, கணிப்பு, அந்தஸ்து, தன்னியல் நிறைவு என்பனவற்றுன் அடிப்படையாக ''விழுமியக் காட்சி'' உருவாக்கப்படுகின்றது. மேற்கூறிய இரண்டு பெரும் கமாறிகளிலும் உயர்ச்சி காணப்படும் பொழுது தொழில் சார் உளநிறைவு அல்லது வேலைத் திருத்தி உண்டாகிறது.

வேலைக்கோல அகலம்;

இக்கோட்பாடு தொழில்சார் உளநிறைவை வேறொரு கண்ணோட்டத்தில் அணுகி நிற்கின்றது. வேலைக்கோல அகலம் (Job Enlargement-) என்பது தொழில் அகலமாக்கல் அல்லது விரிவுபடுத்தல் என்றும் கூறப்படும். ஆசிரியர்களுக்குரிய கல்வியை விரிவாக்குதல், கல்வி முன்னேற்றங்களையும் பதவி உயர்வுகளையும் தொடர்புபடுத்துதல், கற்றல் கற்பித்தலில் நவீன தொழில் நுட்பங்களை உட்புகுத்துதல், அமைப்பிலும் தொழிற்பாட்டிலும் புத்தாக்கங்களை ஏற்படுத்துதல், தொடர்புகளிலும், ஊடாட்டங்களிலும் நேர்முகமான வளர்ச்சிகளை ஏற்படுத்துதல், நிதிசார் அனுகூலங்களை வழங்குதல் முதலிய வேலைக்கோல அகலமாக்கல் நடவடிக்கைகள் தொழில்சார் உளநிறைவை ஏற்படுத்தும் என்று கூறப்படுகின்றது.

நிதிக்கோலங்கள்:

தொழில்சார் உளநிறைவு என்பது ''நிதிவளம்'' என்ற தனித்த ஒரே காரணியின் கட்டுப்பாட்டுக்கு உள்ளாகின்றது. என்பது கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர் துல்லியம் பெற்ற ஒரு கருத்தாக உள்ளது ஆனால், ஆசிரியருக்கு வழங்கப்பெறும் சம்பளம், மேலதிக கொடுப்பனவுகள், சிறப்புப்படிகள் என்பனவை உயர்வடையும்பொழுது தொழில் சார் உளநிறைவு மேலோங்கும் என்ற இக் கருத்து மீளாய்வுக் குரியது.

உளவியலைப் பொறுத்தவரை நிதிசார்ந்த திருத்தி உளம் சார்ந்த திருத்தி என்பவற்றுக்கிடையே இணக்க நிலைகள் காணப்பட்டாலும் துல்லியமான முரண்பாடுகளும் உண்டு. நிதி சார்ந்த திருத்தி இரண்டு வகையாக உருவாக்கப்படுகின்றது. அவையாவன;

1 ஏனைய வாண்மைகளோடு ஒப்பிட்டுப்பார்த்து. தாம் பெறும் சம்பளம் திருத்திகரமானது என்று ஆசிரியர் எண்ணுதல்.

2 வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குச் சம்பளம் போதுமானதாக இருத்தல். தனித்து, சம்பள அனுகூலங்களினால் மட்டும் தொழில் சார் உளநிறைவை ஏற்படுத்திவிட முடியாது. சம்பளம் அதிகரித்த பல தொழில்களிலும், வாண்மைகளிலும் ஈடுபடுவோர் சமூக ஏற்றத் தாழ்வுகளும் மூர்க்கத்தனமான சுரண்டலும் காணப்படும் சூழலிலே தொழில்சார் உளநிறைவைப் பெறமுடியாதுள்ள

னர். சம்பளம் கூடுதலாக இருந்தும் திறமைகள் அங்கீகரிக்கப்படாத நிலையில், ஆக்கத்திறன்களை வெளிப்படுத்த முடியாத நிலையில், சமூக அங்கீகாரம் அற்ற நிலையில் தொழில்சார் உளநிறைவு பாதிக்கப்படுகின்றது.

## கட்டை அமைப்பும், நெட்டமைப்பும்:

தொழில்களை அவற்றின் சிக்கல் பண்புகளின் அடிப்படையில் தட்டை அமைப்புக்கள் (Flat Structures) என்றும் நெட்டமைப்புக்கள் (Tall Structures) என்றும் பாகுபடுத்துவர். செயலாற்றுகை மட்டங்கள் குறைந்ததும் சிக்கல் தொகுதிகள் உறுத்தாததுமான தொழில்கள் தட்டை அமைப்புக்கள் என்று கூறப்படும். அதிக சிக்கல்களும் செயலாற்றுகை மட்டங்களும் அதிகரித்துள்ள தொழில்கள் நெட்டமைப்புகள் என்று விளக்கப்படும்.

இரண்டு விதமான அமைப்புக்களிலும் ஒருவர் உளநிறைவையும் திருத்தியையும் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது இழக்க முடியும். ஆனால் தன்னியல் நிறைவு (Self Actualization) என்பது கட்டை அமைப்புக தொழில்களிலே கூடுதலாக எட்டப்பட முடியும். சிக்கல் அடுக்கமைப்புக்கள் அற்ற நிலையில் மனப்பதகளிப்பு, மனமுறிவு, கொதித்தெழுகை முதலியவை தூண்டப்படுவதற்குரிய வாய்ப்புக்கள் மிகையாக இருக்க மாட்டா.

தொழில்சார் உளநிறைவு என்பது உளவியல், சமூகவியல் என்ற இரண்டு துறைகளினூடாக ஆராயப்படவேண்டியுள்ளது. கைத்தொழிறபுரட்சி, நகரமயமாக்கல், தனியுரிமைப் போட்டிகள், மேல்நோக்கிய சமூக அசைவியக்க முயற்சிகள் முதலியவை உள நிறைவிலும், திருத்தியிலும் நெருக்கீடுகளை ஏற்படுத்தி வந்துள்ளமையைக் காணமுடியும். நவீன சமூக மாற்றங்கள். தேவைகளைப் பன்மடங்காகப் பெருக்கி வருகின்றன; எதிர்பார்ப்புக்களை, தொடர்ந்து மேலெழச் செய்தவண்ணமுள்ளன. ஓர் அலகில் திருத்தி ஏற்பட்ட பின்னர் இன்னோர் அலகினை நோக்கித் தேவை பெயர்ச்சியடைகின்ற நெடுங்கோட்டு வளர்ச்சி தொடர்ந்து செல்கின்றது.

பாரம்பரியமான, தன்னிறைவுக் கிராமியச்சமூக அமைப்பில், சிக்கலான தேவைத் தொகுதிகள் கட்டுப்பட்டிருந்த நிலையில் தொழில்சார் உளநிறைவை ஆசிரியர்கள் இலகுவாக எட்டக் கூடியதாக இருந்தது. இதனால் கிராமிய வாழ்வில் ஒருவித அமைதி உண்டு என்று கூறுவதில் பொருண்மை இருந்தது.

உற்பத்திப் பெருக்கத்தைப் பொறுத்தவரை மூடிய கிராமிய சமூக அமைப்பிலும், திறந்த கைத்தொழில் சமூக அமைப்பு மேம்பட்டதாக இருக்கும். ஆனால் மனநிறைவைப்பொறுத்தவரை மேற் கூறிய அமைப்புக்கு



எதிர்மாறான பண்புகள் காணப்படுவதாகக் கூறும்பொழுது, வளப்பகிர்வின் பாரிய ஏற்றத்தாழ்வுகளைக் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது அதாவது, இலாப மீட்டலும் சுரண்டலும் மனநிறைவைப் பாதிக்கும்.

### கிராமமும் நகரமும்;

கிராமிய நகரவேறுபாடுகள் ஆசிரியரது தொழில்சார் உள நிறைவிலே தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. கிராமியப் பின்புலத்தில் எவ்வளவுதூரம் பொறுப்புக்கள் ஆசிரியர்களுக்குத் தரப்படுகின்றனவோ அந்த அளவுக்குத் தொழில்சார் உள நிறைவு அதிகரித்துச் செல்லும். மாறாக நகரங்களில் ஆசிரியர்களுக்கு எவ்வளவுதூரம் பொறுப்புக்கள் தரப்படாதிருக்கப்படுகின்றனவோ அந்த அளவுக்குத் தொழில்சார் உள நிறைவு ஏற்படும் என்று கொள்ளப்படுகின்றது. அதாவது பொறுப்புக்களைச் சுமக்காது வெகுமதிகளைப் பெறல் நகரப்பண்பாட்டிலே தூண்டப்படுகின்றது. ஆனால் கிராமிய நகர வேறுபாடுகளை வெறுமனே பௌதிக வேறுபாடுகளாகக் கொள்ளாது பொருள் உற்பத்தி முறைமை, பங்கீடு, சமூக உறவுகள் என்ற பரந்த தளத்திலே ஆராய்தல் வேண்டும்.

### வயது ஏற்றங்கள்:

வயது ஏற்றத்துக்கும் ஆசிரியரின் தொழில்சார் உள நிறைவுக்கு மிடையேயுள்ள தொடர்புகள் உளவியலில் ஆராயப்படுகின்றன. வயது ஏற்றமடைந்து செல்லும் பொழுது (விதிவிலக்குகள் இருந்தாலும்) பொதுவாக ஆசிரியர்கள் தொழில் சார் உள நிறைவை அனுபவிக்கின்றனர். அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை: ஆசிரியர் தாம் ஆற்றிய “நீண்ட பணிகளைத்” தொகுத்துப் பார்த்தலும், தமது மாணாக்கரின் “நெடிய வளர்ச்சியை” அனுபவிக்கக்கூடியதாக இருத்தலும், என்று கூறப்படுகின்றன.

குறைந்த வயது எல்லைகளுள் ஆசிரியராக இருப்போர் உள நிறைவைப் பொதுவாக எட்ட முடியாதுள்ளனர். இளமைப் பருவத்தில் ஆசைகளும் விருப்பங்களும் பன்மடங்காக இருத்தலும், வேறு தொழில்களுக்குப் பெயர்ந்து செல்லக் கூடிய உடற்பலம், உளப்பலம், இருத்தலும் தொழில் சார்ந்த உள நிறைவைப் பாதிக்கின்றன.

### ஆண் - பெண் வேறுபாடு:

வயது ஏற்றத்தைப் போன்று ஆண் பெண் வேறுபாடுகளும் தொழில் சார் உள நிறைவில் தாக்கங்கள் ஏற்படுத்துகின்றனவா என்பதும் ஆராயப்படுகின்றது. பெண் ஆசிரியைகள் கூடுதலான தொழில்சார் உள நிறைவை அனுபவிக்கின்றனர் என்பது தெரியவருகின்றது ஏனைய தொழில்களிலும் பார்க்

கக் கூடுதலான ஓய்வு நாள்கள், குழந்தைகளுடன் பழகுவதனால் ஏற்படும் மகிழ்ச்சி, முறை சார்ந்ததும், முறை சாராததுமான குழுக்களில் இடம்பெறுவதனால் கிடைக்கும் உளவியல் திருத்தி, பாடசாலை விழாக்கள் ஏறபடுத்தும் கவர்ச்சி, தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற் கூடிய பங்களிப்பை வழங்கக் கூடியதாயிருத்தல், முதலியவை பெண் ஆசிரியர்களுக்கு உள நிறைவை ஏற்படுத்தும் அனுகூலப்படிகளாகவுள்ளன.

**பன்முகக் கல்விச் செயற்பாடுகள்:**

ஆசிரியர்கள், பன்முகமான பட்டங்கள், தராதரங்கள், பயிற்சிகள் பெறும்பொழுது, அவை வேறு வாண்மைகளுக்குப் பெயர்ந்து செல்லக் கூடிய, நிலைக்குத்துவிசையைத் தூண்டும் சந்தர்ப்பங்களில் தொழில் சார் உள நிறைவு பாதிக்கப்படுகின்றது.

**இருமுனை அணுகுமுறை:**

கற்றல் கற்பித்தலில் மேம்பாடு நிகழவேண்டும். கல்வித் தரம் பரந்து உயரல் வேண்டும், பிரதிகூலக்குழுவினரும் கல்வியால் மேலோங்கல் வேண்டும் என்றசமூக விருப்பங்கள் விரிவடையும்சமகாலச்சூழலில் ஆசிரியரின்தொழில் சார் உளநிறைவின் அபிவிருத்தி மீது சமூகம் உடனடியாக கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. மறுபுறம் ஆசிரியர் தமது வாண்மையின் பிரதியீடிலாச் சிறப்பை உணர்ந்து "சுய ஊக்கலை" விசைப்படுத்தல் வேண்டியுள்ளது. ●

**உரிமைக்குரல்**

"எனக்காகத் தீர்மானங்களை நீங்களே எடுப்பின் என்றுமே தீர்மானங்களை எடுக்க என்னால் முடியாமற் போகும் நான் இன்னாராக இருக்க வேண்டும் என நீங்கள் தீர்மானிப்பின், நான் என்னையே இழந்து விடுவேன். நானாகச் சிந்திப்பதற்கு நீங்கள் இடமளிப்பின், அதுவே நீங்கள் செய்யும் பேருதவியாகும்".

— ஒரு சிறுவன்

# நான் விரும்பும் ஆசிரியர்

*நான் விரும்பும் ஆசிரியர் பற்றி எழுதுமாறு அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகிய நான்கு தரப்பினரையும் கேட்டிருந்தோம். வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையின் அதிபர், எத்தகைய ஆசிரியரை விரும்புகின்றார் என்பதை அவருடைய இக்கட்டுரை விளக்குகின்றது.*

**வ. யோகானந்தசிவம்**

நான் ஓர் அதிபர் என்ற காரணத்தால் நான் விரும்பும் ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும் என்பதை அதிபரின் நிலையிலிருந்தே நோக்குகின்றேன்.

ஓர் ஆசிரியர் முதலில் மாணவர்கள் சக ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரிடத்தில் அன்புடையவராக இருக்கவேண்டும். அன்புடைமை ஒன்றே எல்லா நன்மைக்கும் வளர்ச்சிக்கும் திறவுகோலாகும்.

ஓர் ஆசிரியர் நிறைந்த ஒழுக்கமுடையவராக இருக்க வேண்டும். மாணவரிடம் போலச் செய்தல் வழக்கம் நிரம்ப உண்டு. நல்லொழுக்கமுடைய குடிமக்களை உருவாக்குவதும் கல்வியின் நோக்கமாகும். ஆசிரியர் நல்லொழுக்கமுடையவராக இருந்தால் அவரைப் பின்பற்றி. எதிர்காலக் குடிமக்களாகிய இன்றைய மாணவரும் நல்லொழுக்கமுடையவராவர். 'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பார் திருவள்ளுவர்.

ஓர் ஆசிரியர் பூரண அறிவுடையவராக இருக்கவேண்டும், தன் வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொண்டே இருக்கவேண்டும். தனது பாடத்தில் நிறைந்த அறிவுடையவராகவும் நல்ல அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும். தனது பாடத்தில் நிறைந்த அறிவும் அனுபவமும் உடைய ஆசிரியராலேயே மாணவர்களுக்கு இலகுவாகவும் சிறப்பாகவும் கல்வி புகட்ட முடியும்.

ஓர் ஆசிரியர் கற்பித்தல் நுட்பங்களையும், முறைகளையும் நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். மாணவர்களுடைய நிலைக்கும் தரத்திற்கும் ஏற்பத் தன்னைமாற்றிக் கொண்டு அவர்களைக் கல்வி உலகிற்கு அழைத்துச் செல்பவராக இருக்க வேண்டும். மாணவர்கள் விடயத்தை இலகுவில் கிரகிக்கக் கூடியவாறு கல்வியை ஊட்டுவதில் வல்லவராக இருக்க வேண்டும். அலுப்பும், வெறுப்பும். கசப்பும் ஏற்படாதவாறு இனிக்கக் கூடிய விதத்தில் உணவை ஊட்டும் தாய்போல அவர் இருக்கவேண்டும்.

ஓர் ஆசிரியர் தனது கடமையைக் கண்ணாகக் கருதுபவராக இருக்க வேண்டும். பாடசாலை தொடங்க முன்னர் பாடசாலைக்குச் செல்பவராகவும் பாடசாலை முடிவடைந்த பின்னரே வீட்டுக்குச் செல்பவராகவும் இருக்கவேண்டும். அதிபரினால் ஒப்படைக்கப்படும் பாடசாலை சம்பந்தமான வேலைகளைத் தமது திறமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப உடனுக்குடன் சிறப்பாக ஆற்றக்கூடியவராக இருக்க வேண்டும். பாடசாலை நிருவாகத்தில் நேரசூசியின்படி கடமைகளை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். பாட வேளைகளைப் பொறுத்தவரை மணிக்குப் பணியும் மனோபாவம் முக்கியமானதாகும். முன் கூட்டியே பாடத்திட்டம், பாடக்குறிப்பு தயாரித்தல், மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளை உடனுக்குடன் திருத்துதல், லீவுக் கடிதங்களை உடனுக்குடன் சமர்ப்பித்தல், மாணவர்களுக்கான வாராந்த மாதாந்த, தவணைப் பரீட்சைகளை அந்தந்த நேரத்தில் நடத்துதல், இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் தனது திறமைக்கேற்றவற்றில் முன்னின்று உழைத்தல், புதிய, நல்ல பயனைத் தரக்கூடிய ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் சக ஆசிரியர், அதிபர் ஆகியோருக்கு வழங்குதல், சமூகத்தோடு ஒத்துப் போதல், சமூக முன்னேற்ற நடவடிக்கைகளில் தன்னை இணைத்தல் போன்ற செயற்பாடுகளில் தன்னை அர்ப்பணிப்பவராக இருக்கவேண்டும்,

ஓர் ஆசிரியர் தனது வகுப்பு மாணவர்களுடைய பிரச்சினைகளையும், செயற்பாடுகளையும் தன்னளவில் தானே ஆராய்ந்து சரியான நீதியான முடிவுகளை எடுக்கக்கூடிய திறமையும், தற்துணிவும் உடையவராக இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் பிற ஆசிரியர்களையும் அதிபரையும் நம்பி இருக்கக்கூடாது. சிறிய விடயங்களையும் பெரிய விடயங்களாக்கி, அம்பலப்படுத்தி அதிபரையும் ஏனைய ஆசிரியர்களையும் கஷ்டத்தில் மாட்டிவிடக் கூடாது. வகுப்புக் கட்டுப் பாடும் வகுப்பு வேலைகளில் அக்கறையும் ஆர்வமும் உடையவராக மிளிர வேண்டும் பெற்றோருடன் நெருங்கிய தொடர்பு உடையவராக இருக்கவேண்டும். கடமை என்ற உணர்வுடன் கருமமாற்ற வேண்டும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற மந்திரத்தை மதிப்பவராக இருக்க வேண்டும். தனது குறைகளை அறிந்து திருத்தக்கூடியவராகவும் நிறைகளைக் கேட்டுத் தொடரக்கூடியவராகவும் இருக்கவேண்டும்.

ஓர் ஆசிரியர் பெற்றோர்க்கும், மாணவர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கவேண்டும். மாணவர்களினதும், ஏனைய ஆசிரியர்களினதும், அதிபரினதும், பெற்றோரினதும் மனம் புண்



படும்படியான வார்த்தைகளைச் பேசுவதையோ செயல் செய்வதையோ எச்சந்தர்ப்பத்திலும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். எதையும் நுட்பமாகவும், திறமையாகவும், விரைவாகவும், சாமர்த்தியமாகவும் கையாளக் கூடிய வல்லமை படைத்தவராக ஓர் ஆசிரியர் இருக்க வேண்டும். கத்தி கொண்டு வெட்ட வருபவன் கத்தியை எறிந்துவிட்டு வணங்கிச்செல்லக்கூடியவாறு மதிநுட்பமும் ஆளுமையும் உடையவராகத் திகழ வேண்டும். மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், பெற்றோர், நலன் விரும்பிகள், கிராமத்தோர் யாவராலும் மதிக்கப்படக்கூடியவராகவும், பாராட்டப்படக்கூடியவராகவும் நடந்துகொள்ளவேண்டும்.

இத்தன்மைகள் நிரம்பிய ஓர் ஆசிரியரையே நான் விரும்புகின்றேன்.

## ஆசிரியர்களுக்கு

"குழந்தைகளின் பார்வையில் கணவன் - மனைவியாக நடந்துகொள்ளாதீர்கள்; பெற்றோராகவே நடந்துகொள்ளுங்கள்" என்பார்கள். அதுபோல, மாணவர்களின் பார்வையில் ஆசிரியர்கள். ஆசிரியர்களாகவே நடந்துகொள்ள வேண்டும்; அதுவும் இலட்சிய ஆசிரியர்களாக விளங்கவேண்டும்.

முன்பெல்லாம் இருந்த ஆசிரியர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள்; எவ்வளவு முன்மாதிரியானவர்களாக இருந்தார்கள் என்பது நமக்கு மிக நன்றாக, நிதர்சனமாகவே தெரியும். அங்கங்கே ஒன்றிரண்டு தவறுகள் இருந்திருக்கலாம். ஆனால் அது மிகவும் அபூர்வந்தான், இப்போது பெரும்பாலும் சரியாக இல்லையே!

கல்வி அளிப்பது என்பது பெரிய, மகத்தான, புனிதமான பணி என்கின்ற மனோபாவமும், எதிர்கால சமுதாயத்துக்கான பொறுப்புள்ள பிரஜைகளை உருவாக்குகின்ற பணி என்கின்ற சிந்தனையும், அர்ப்பணிப்பு எண்ணமும் வரவில்லையே என்பதுதான் கவலைக்குரியதாக உள்ளது.

**தூப்புல். என் லட்சுமிநரசிம்மன்**

(கல்கி - தீபாவளி மலர் - 1993)

# 'பா'ரதத்தில் துணைவேந்தர்

பல்கலைக்குத் துணைவேந்தர்
பைந்தமிழர் கல்விக்குப்
பயன் தந்தபெரு வேந்தர்
சொல் செயலில் எண்ணத்தில்
தூயபணி தனைக் கொண்டு
துயர் துடைத்த துரைவேந்தர்
வல்லோராய் மாணவர்கள்
வாழ் வாங்கு வ ழ்வதற்கு
வழி சமைத்த உயர்வேந்தர்
எல்லோரின் உள்ளத்தும்
இடம் பிடித்து நலம் செய்த
இணையில்லாத் தனி வேந்தர்

**தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவை**

★ ★


பூமாலை சூட்டியுன்றன் பூதவுடல்
போகவிட்டோம்
பாமாலை யோடு கண்ணீர்ப் பன்னீர்
சொரிந்தழுதோம்
நாமாளும் இசைபட்டப் படிப்பென்று
உயரவைத்த
கோமானே துரைராசா கோடியிலே
நீயொருவன்

**— பொன். சுந்தரலிங்கம்**

★ ★

முழுமக்களுக்கும் வழிகாட்டும்
முதிர்ந்த அறிவைப் பாடுகின்றோம்
பழுதில்லாத நலம் பயக்கும்
பணியின் பெருமை பாடுகின்றோம்
பழுதில் லாத நலம் பயந்து
பண்பாய் ஒளிர்ந்து நமைப் பிரிந்த
அழகு துரையே! அருநிதியே!
அன்பு வணக்கம் துரையரசே!

**— இ. முருகையன்**



நெடிய உன் உடலும்; வெள்ளை
நெஞ்சுடன் விரிந்த நோக்கும்
அடிமுடி அறியா உந்தன்
அறிவுடன் உழைப்பும்; எங்கள்
விடியலுக்கான போரில்
விருப்புடன் இணைவும் கொண்ட
எடுபிடி எதுவும் அற்ற
எளிமையே! போய்விட்டாயா?
குருதியில் குளிக்கும் மண்ணில்
குருவியாய்த் திரிந்தாய்; சொந்தத்
தெருவினில் நடந்தாய் எங்கள்
"தேசியத் தலைவன்" கையால்
விருதினைப் பெற்றாய், அன்று
விருந்திலும் கலந்தாய், நாங்கள்
வருந்திடத் துடிக்க இன்று
வாசலிற் கிடக்கின்றாயே!

**— புதுவை இரத்தினதுரை**

மண்ணினில் மலர்ந்து பண்பால்
மானிட நேயம் காத்தாய்
எண்ணரும் செயல்கள் ஆற்றி
ஏற்றதோர் தலைவன் ஆனாய்
கண்ணினில் நகையும் மின்னக்
கனிவுடன் உறுதி சொல்வாய்
பன்னரும் அனர்த்தம் வந்தும்
பயமிலா துலகம் சுற்றி
இன்னரும் நாட்டைக் காக்க
மீண்டுமே வருவேன் என்றாய் - நாம்
பண்ணிய பாவம் என்ன
பறந்து நீ போன தென்ன - எம்
கண்ணினில் நீரும் இல்லை
கண்திறந் தெழுந்தால் என்ன!

**— யாழ். அரச அதிபரும் ஊழியரும்**

★ ★

உலகெங்கும் அலைகின்ற தமிழர்க்கு இங்கே
உருவாகும் விரைவாகத் தமிழீழம் நன்றே
பலசுற்ற துரைராசர் பல காலும் சொன்னார்
பணி செய்து அணி செய்து உயிர் பெய்தும்
உள்ளார்

**— சிற்பி**

★ ★

கரையிலாக் கல்விப் பெருங்கடல் சிகரம்
கலங்கரை விளக்காய்த் திகழ்ந்தவன்
இம்மண்
பொருளாதார உயர்வினை எட்டும்
புதிய கருக்கள் விதைத்தவன் மக்கள்
துரைராசாவெனப் புகழ்ந்த தொண்டு
துடிக்க வைத்தெமைப் பிரிந்து
சென்றதால்
கரையையேகாணாப்பெருந்துயர் கொண்டாள்
கலங்கித் தவித்தாள் கல்வியின் தாயாள்

**— நெடுந்தீவு லக்ஸ்**

# நான் விரும்பும் ஆசிரியர்

கா. முத்துக்கிருஷ்ணன்

*இலட்சிய ஆசிரியர் ஒருவர் எப்படி இருக்க வேண்டும்? கேள்விக்கு விளக்கம் தருகின்றார் நல்லூர் கா. முத்துக்கிருஷ்ணன்.*

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற ஒரு வரிசை இருப்பதை நாம் அறிவோம். நாம் பிறந்தவுடன் முதலிற் காண்பது எமது அன்னையை. அதன் பின் அன்னை அறிமுகம் செய்து வைக்கிறார் 'தந்தை இவர்தான்' என. இதற்கு அடுத்த படியில் இருப்பவர்தான் குரு. குருவிடம் அழைத்துச் செல்பவர்கள் எமது பெற்றோர்கள். எமது கண்ணைத் திறந்து இறைவனிடம் போகும் வழியைக் குரு காட்டுகின்றார். ஆகவே இந்த நால்வரும் எமது வாழ்வில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக குரு மிகவும் முக்கிய இடத்தை வகிக்கின்றார். ''குரு இல்லா வித்தை பாழ்''. ''குரு வேதம்'', என்ற வாசகங்கள் குருவின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. குரு எம்மைச் சகல வழிகளிலும் ஈடேற்றுகின்ற ஒருவராகின்றார். தற்காலத்தில் குரு என்று நாம் கூறுவது, எமது ஆசிரியர்களையே. நல்ல ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றிச் சிறிது சிந்திக்கலாம்.

நல்ல ஆசிரியர் தனது கடமையைச் சரிவரச் செய்பவராக இருக்கவேண்டும். அத்துடன் நல்லொழுக்க நெறிகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்; மாணவர்களாலும், சமூகத்தாலும் விரும்பப்படக் கூடியவராகவும் அமைதல் வேண்டும்.

ஆசிரியர் தனது கடமைக்குக் குறித்த நேரத்திலும் ஒழுங்காகவும் செல்ல வேண்டும். கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்கு இவை பெரிதும் உதவுகின்றன.

ஆசிரியர், தனது பாடங்களைப் பற்றிச் சிந்தித்து முன் ஆயத்தத்துடனேயே பாடசாலைக்குச் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் அவர் தனது பாடங்களை மிக இலகுவாகவும், குறித்த காலத்திலும் சரிவரச் கற்பிக்கக் கூடியவராக இருப்பார். இல்லாவிடில் பாடங்களைப் போதிய விளக்கமின்றிக் கற்பித்து அரைகுறையாக விட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

ஆசிரியர், வகுப்பறையில் மாணவருடன் மிகவும் அன்பாகப் பழகுபவராக இருத்தல் வேண்டும். அப்போதுதான் மாணவரும் ஆசிரியருடன் அச்சமின்றிப் பழகிப் பாடத்தைக் கற்க முடியும். ஆசிரியரும் மாணவரின் மனதைக் கவர்ந்து தனது பாடத்தை இலகுவாகக் கற்பிக்க முடியும்.

மாணவரின் மனநிலையை அறிந்து, அவர்களுக்கு ஏற்ற முறையிற் கற்பிக்க வேண்டும். குழுமுறைக் கற்பித்தலையோ விளையாட்டுமுறைக் கற்பித்தலையோ மாணவரின் மன நிலைக்கு ஏற்ப மாற்றியமைத்துக்கொள்ளக் கூடியவராக இருக்கவேண்டும். இதனால் ஆசிரியர் மாணவர்களைப் பாடத்திற் கவனம் செலுத்த வைக்கலாம்.

''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்பதிலிருந்து ஒழுக்கம், உயிரைவிட மேலானது என்பதை அறியலாம். ஒழுக்கம் எல்லாருக்கும் முக்கியமான ஒன்று. அதிலும் ஆசிரியருக்கு ஒழுக்கம் மிக முக்கியமானதாகின்றது. ஏனெனில் நாளைய தலைவர்களை உருவாக்கும் பணியினை மேற்கொள்பவர்களில் ஆசிரியர்கள் முக்கிய பங்கை வகிக்கிறார்கள் நல்லொழுக்கத்துடன் வாழ்பவராக இருந்தாற்றான் தமது மாணவரையும் ஆசிரியர்கள் நல்லொழுக்கமுள்ளவராக மாற்ற முடியும். இல்லையேல் மாணவர்களை ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்குட்கொண்டுவர முடியாதுபோகலாம். ஆகவே ஆசிரியர் ஒழுக்க சீலராக வாழவேண்டும்.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவருடன் நேர்மை வழியில் நடக்க வேண்டும்; மாணவர்களைச் சரிசமமாக மதிக்க வேண்டும். எல்லா மாணவர்களையும் நடுநிலையில் நின்று நோக்கவேண்டும். இதனால் எல்லா மாணவர்களின் விருப்பையும் ஆசிரியர் பெற முடியும். இல்லாவிடில் ஒருசில மாணவரால் ஆசிரியர் வெறுத்து ஒதுக்கப்படக்கூடிய நிலை ஏற்படும்.

ஆசிரியர், வகுப்பறையிற் பாடத்தைக் கற்பிக்கும்போது துணைச் சாதனங்களைக் கொண்டு மிக கவர்ச்சிகரமாகவும், தெளிவாகவும் கற்பிக்க வேண்டும் இதனால் மாணவர்கள் பாடத்தில் தமது முழுக்கவனத்தையும் செலுத்துவார்கள்; எல்லா மாணவரும் பாடத்தைச் சரிவரக் கற்றவர் ஆகின்றனர்.

சக ஆசிரியர்களுடன் அன்பாகப் பழகுவதனால், ஆசிரியர் ஏனைய ஆசிரியர்களுடன் பிணக்குகள் இன்றிச் செயற்படமுடிகின்றது மற்றும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கையும் வளர்க்க வேண்டும். இதனால் ஏனைய ஆசிரியர்களின் விருப்பத்தையும் நிறைவேற்றமுடிகின்றது.

நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடியவராக இருத்தல

வேண்டும். இதனால் பாடசாலை விடயங்களை நன்றாகவும், பிரச்சினைகள் இன்றியும் நிறைவேற்றக்கூடியதாக இருக்கும்; பாடசாலையும் எல்லா வழிகளிலும் முன்னேற்றம் காணக்கூடியதாக இருக்கும்.

ஆசிரியர் சமுதாயத்தில் முன் மாதிரியாக நடக்கவேண்டும். இதனாற் சமூகத்தில் உள்ளவர்களை நல்வழிப்படுத்தவும் சமூகத்தை முன்னேற்றவும் முடியும்.

தான் வாழும் சமுதாயத்திற்கு ஆசிரியர் பல வழிகளில் உதவலாம். தனது சூழலில் உள்ள பொது ஸ்தாபனங்களில் அங்கம் வகித்து அவை திறம்பட இயங்கத் தன்னாலான பணிகளைச் செய்யலாம். நேர்மையுடனும், பொது நோக்குடனும் செயற்படுவதனால் தனது கிராமத்தையோ மாவட்டத்தையோ பல வழிகளிலும் முன்னேற்றலாம்.

மாணவர்கள் வழிதவறிச் செல்லும் சந்தர்ப்பங்களில், அவர்களுக்கு நல்ல புத்திமதிகளைக் கூறி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டிய கடமை ஆசிரியருடையதேயாகும். இதனால் மாணவர்கள் நற்பிரசைகளாக வாழ வழி பிறக்கின்றது; நல்லதொரு சமுதாயம் உருவாக முடிகின்றது.

மாணவர்களிடம் காணப்படும் திறமைகளை இனம்கண்டு, அவர்களை அத்துறைகளில் வழி நடத்தி, எதிர்காலத்தில் அவர்களைச் சிறந்த கலைஞராகவோ, அறிஞராகவோ மாற்றும் பங்கும் ஆசிரியரிடமே உண்டு எனலாம். இதனால் மாணவ சமூகமும், சமுதாயமும் நல்லபலனை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

---

**முன்மாதிரி : ... ... ... ... ... ... ... ... ... ...**

முன்மாதிரியான ஆசிரியரின் சொல்லிற்கும் செயலிற்கும் வேறுபாடு காணப்பட மாட்டாது. மாணவ மாணவிகள் நூல்களிலிருந்தும் ஆசிரியர்களின் சொற்களிலிருந்தும் நல்லொழுக்கத்தைக் கற்றுக்கொள்வதிலும் பார்க்க ஆசிரியரின் செயல்கள்மூலமே அதைக் கற்றுக்கொள்கிறார்கள்.

... ... ... ... ... ... **வினோபாபாவே**

---

# ஆண்டு 10B

**வண்ணை சே. சிவராஜா**

*10 B வகுப்பிற் படிப்பிப்பதற்கு நுழைந்த புதிய ஆசிரியர் ஆனந்தனைக் கடதாசி அம்புகளும் மாணவர்களின் காட்டுக்கூச்சல்களுமே வரவேற்றன. அத்தகைய மாணவர்களைத் தன் வசப்படுத்தி அவர்களைக்கற்றலில் ஈடுபடச் செய்யும் திறமையும் பொறுமையும் அந்த ஆசிரிடம் இருந்ததா? தன் நீண்டகால ஆசிரிய அனுபவத்தையும் பண்பட்ட எழுத்தாற்றலையும் இணைத்து இக்கதையை எழுதியுள்ளார் யாழ் இந்துக் கல்லூரியின் உதவி அதிபர் சிவராஜா.*

ஆண்டிறுதி விடுமுறை முடிந்து பாடசாலைகளெல்லாம் புது வருடத்திற்காக அன்று மீண்டும் தொடங்கிவிட்டன.

எம். எம். வி எனச் சுருக்கமாகக் குறிப்பிடப்படும் மாவடி மகா வித்தியாலயம் களைகட்டிவிட்டது. புது வருடத்திற் புதுப் பொலிவுடன் ஆசிரியரும் மாணவரும் காணப்பட்டனர். புது முகங்களும் அங்கங்கே காட்சியளித்தன.

மாவடிக் கிராமத்திற்கு அணிகலனாக விளங்குவது அந்தப் பாடசாலை. அதன் வடபால் வயல்வெளியும் தென்பால் புகையிலை, வெங்காயம் முதலியன விளைவிக்கப்படும் தோட்டங்களும் உள்ளன. ஊரின் பேருக்கேற்றாற்போல் மாஞ்சோலைகளும் அங்கங்கே உண்டு. மக்கள், பெரும்பாலும் விவசாயிகளே. சிலர் வெவ்வேறு சிறு தொழில்களையும் செய்து வந்தனர். அண்மைக்காலத்தில், இளைஞர்கள் சிலர் உழைப்புத் தேடி ஜேர்மனிமத்திய கிழக்கு போன்ற இடங்களுக்குச்சென்றுள்ளனர்.

ஆண்டு ஒன்றிலிருந்து பதினொன்றுவரை ஏறக்குறைய 600 மாணவர்களும் 24 ஆசிரியர்களும் அப்பாடசாலையிலுள்ளனர். சற்று வசதிபடைத்த மாணவர் சிலர், சில மைல்களுக்கப்பாலுள்ள பிரபல பாடசாலைகளுக்குச் சென்றுவிட, பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளே அங்கு கல்வி கற்று வருகின்றனர். அந்த மாணவர்களின் அறிவுத் திறனும் சராசரிக்குக் கீழ் என்பது அங்குள்ள ஆசிரியர்கள் சிலரின் அசைக்க முடியாத அபிப்பிராயமாகும்.

அதிபர் சிவபாதம் அவர்களுடன் அவருடைய அலுவலகத்

திற் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்த புது முகமொன்று அங்கிருந்து வெளியேறி, ஆசிரியர்கள் தங்கும் அறைக்குட் சென்று அமர்ந்தது. கல்வியைத் தவிர, உலகின் ஏனைய பிரச்னைகளைப் பற்றியெல்லாம் அலசிக்கொண்டு கலகலப்பாக இருந்த ஆசிரியர்களின் கவனம் அந்தப் புதுமுகத்தின் பக்கம் திரும்பியது.

''தம்பி! இடமாற்றத்தில் வந்திருக்கிறீரோ?'' - ஆசிரியர்களிற் சற்று மூத்தவரான சாம்பசிவம் கேட்டார்.

''நான் ஒரு மற்ஸ் ட்ரெயின்ட் பயிற்சி முடிந்ததும் இங்கை அனுப்பிவிட்டார்கள்'' எனச் சொல்லித் தன் பெயரையும் கூறினான் புதுமுகம் ஆனந்தன்.

"ஏன் வேறை நல்ல பள்ளிக்கூட மொண்டும் கிடைக்கேல்லையோ?'' என்று தன் பரிதாபத்தை வெளிப்படுத்தினார் சாம்பசிவம்.

''தம்பி! நீர் தொழிலில் முன்னேற வேண்டியவர்; எதிர் காலத்துல் அதிபராகவோ அதிகாரியாகவோ வரக்கூடியவர் ... இந்தப் பள்ளிக்கூடத்திலையிருந்து மட்டையடிக்கப் போறீரோ?''—அந்தக் காலத்து இன்டர் ஆட்ஸிற் சித்தியடைந்த ஆசிரியர் பொன்னம்பலத்தின் வரவேற்பு இப்படியிருந்தது.

பதிலேதும் சொல்லாமல், புன்னகையொன்றை உதிர்த்து விட்டு அமைதியாக இருந்தான் ஆனந்தன்.

சிறிது நேரத்தில், உப அதிபர் தணிகாசலம் அங்கு வந்தார்; புது வருடத்திற்குரிய நேரசூசியை ஆசிரியர்களிடம் கொடுத்தார்.

''கணித ஆசிரியர் சுவாமிநாதன் இளைப்பாறிவிட்டார். அவர் படிப்பித்த வகுப்புக்களுக்கே உம்மைப் போட்டிருக்கிறோம்'' என்றபடி நேரசூசியை ஆனந்தனிடம் கொடுத்தார் உப அதிபர்.

உப அதிபர் நிற்கும்வரை அமைதியாக இருந்த அந்த அறை, அவர் போனதும் புதிய தொனியில் முணுமுணுக்கத் தொடங்கியது.

''எட்டுப் பாடவேளைதான் எனக்கு ஒய்வு சேவை நீடிப்பிலை இருக்கிறன் எண்டதையும் யோசியாமல், எனக்கு வேலையைச் சுமத்தியிருக்கினம் ...... 10 Bக்கு இந்த முறையும் நான்தான் தமிழ்... 9 Bயிலை அவங்களோடை நான் பட்டபாடு எனக்கெலலோ தெரியும்...'' பகுதித் தலைவர் பதவி என்று வரும் போது, வயது, சேவை மூப்பு என்றெல்லாம் தன் தகுதியை வலியுறுத்தும் சாம்பசிவம், மேலதிக வேலைகள் என்று வரும் போது தான் சேவை நீடிப்பில் இருப்பதைத்தான் நினைவூட்டு



வார். பாடசாலை முடிந்ததும் பாடசாலைக் கீதம் பாடும் முன்பே, தன் சைக்கிளில் ஏறிவிடும் சைக்கிளோட்ட வீரர் அவர்

தனக்குப் பக்கத்திலிருந்த ஆனந்தனின் நேரசூசியிற் பார்வையைச் செலுத்திய பொன்னம்பலத்தாருக்குப் பெரிய நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன. ஆனந்தனுக்கு 37 பாடவேளைகள்; தனக்கு 32 பாடவேளைகள் மட்டுமே என்றாலும் தன்மகிழ்ச்சியை அடக்கிக்கொண்டு ஆனந்தனுடன் கதைத்தார்.

''தம்பி! புதிசாய்ப் படிப்பிக்கிறதுக்கு வந்திருக்கிறீர் ... ஒரு யோசனையுமில்லாமல் 10Bக்குக் கணிதத்தைப் போட்டிருக்கினம் நான் தோட்டக் காட்டிலை படிப்பிச்சிருக்கிறேன். முஸ்லிம் பள்ளிக்கூடத்திலை படிப்பிச்சிருக்கிறன் ஆனால் இந்த 10 Bக் காரரைப்போலை மொக்கரையும் குழப்படிகாரரையும் நான் காணேல்லை இவங்களுக்குத் தமிழே சரியாக வராது கணக்கு எங்கை வரப்போகுது'' என்று ஒரு சரித்திரமே சொல்லி முடித்தார் அவர்.

மீண்டும் ஒரு புன்னகையைத் தவிர, ஆனந்தனுடைய முகத்தில் வேறொரு மாற்றமும் ஏற்படவில்லை.

மணி அடித்தது; தேவாரம் பாடப்பட்டது. தொடர்ந்து, ஆசிரியர்கள் தத்தமக்குரிய வகுப்புக்களுக்குச் சென்றனர். ஆனந்தன் தன் நேரசூசியைப் பார்த்தான். முதற் பாடம் 10 Bக்குக் கணிதம்.

வகுப்பினுட் காலடி எடுத்து வைத்ததும் 'ஷெல்' வந்து தாக்கியதைப் போல், 'டஸ்ரர்' ஒன்று அவனது முகத்தைப் பதம் பார்த்தது. நாலைந்து கடதாசி அம்புகள், ஹெலிகொப்டரிலிருந்து பாயும் 50 கலிபரைப் போல் அவனைத் தாக்கின.

'கூபீர்' என்று சிரிப்பொலி. ஆண்களும் பெண்களுமாகச் சுமார் முப்பது மாணவர்கள் ஒழுங்கற்ற முறையிற் பலவித ஒலிகளை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

ஒன்றுமே நடவாததைப் போல், ''வணக்கம் பிள்ளைகளே'' என்றான் ஆனந்தன்.

பதிலுக்கு யாரும் வணக்கம் சொல்லவில்லை.

''நானும் உங்களைப்போல் மாணவனாக இருந்துதான், பின்னர் ஆசிரியராக வந்திருக்கிறேன். வகுப்பறையிற் பாடங்களைப் படிப்பதில் அதிக அக்கறை எடுக்க வேண்டும். பாடசாலை விட்டதும், விளையாட்டு மைதானத்திற்குச் சென்று விளையாடலாம். உங்களுடன் சேர்ந்து விளையாட்டுக்களில் நானும் கலந்து கொள்வேன்'' - முகத்திற் புன்னகையும் குரலில் உறுதியுமாக ஆனந்தன் சொன்னான்.

மாணவர்கள் ஒருவனையொருவர் பார்த்தனர். மாணவர்களில் சற்றே பருத்த, நெடிய பையன் ''உங்களுக்கு, புட்போல் விளையாடத் தெரியுமா?'' என்று கேட்டான். அவன் பெரிய குழப்படிகாரன் என்பதை அவனுடைய தோற்றமும் தொனியும் காட்டின.

''தம்பி நான் பாடசாலையில் வொலிபோல, கிரிக்கட். புட்போல் எல்லாம் விளையாடினனான். இந்தப் பள்ளிக்கூடத்தில் கிரிக்கட்டுக்கு வசதியில்லை. வேணுமென்றால் காலபந்து கைப்பந்து என்பவற்றை அறிமுகம் செய்வோம்'' என்றான்.

''சேர் என்னையும் சேருங்கோ,'' எனப்பல குரல்கள் எழுந்தன.

''சரி பாடத்திற்கு வருவோம், சென்றவருடம் படித்த கணக்கெல்லாம் ஞாபகத்திற்கு வருகின்றதா? என்றான் ஆனந்தன்.

''சேர், எங்களுக்கு ஒன்டுமே விளங்கவில்லை'' என்றான் அந்த உயர்ந்த மாணவன். ஆனந்தனுக்கு வியப்பாக இருந்தது.

''பரவாயில்லை. இப்ப முதலில், ஒன்பதாம் ஆண்டுக்குரிய பகுதியைப் படித்துப்போட்டு பிறகு பத்தாம் ஆண்டுக்குரிய பகுதிக்குச் செல்வோம்'' எனச் சொல்லிக் கொண்டே கரும்பலகையிற் கணக்கொன்றை எழுதினான். சிறு கேள்விகள் மூலம், மாணவர்கள் ஒவ்வொருவரையும் சிந்திக்க வைத்தான். சரியான பதில் சொன்னவர்களை மனந்திறந்து பாராட்டினான். பதில் சொல்ல முடியாமற் தடுமாறியவர்களை அனுதாபத்துடன் அணுகி, கேள்விகளை மேலும் இலகுவாக்கி அவர்களிடமிருந்தும் பதிலைப் பெற்றான். அவனுடைய கற்பித்தல் முறை ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் உற்சாகத்தையும் தன்னம்பிக்கையையும் தளிர்விடச் செய்தது.

முதலாந்தவணையின் முதல் நாளானபடியால், பாடசாலை முடிந்து, மாணவர்கள் வெளியேறியதும் ஆசிரியர்களின் கூட்டம் நடைபெற்றது.

அதிபர் சிவபாதம் புதுவருடத்தில் செய்யவேண்டியனவற்றை அறிவுறுத்தியதோடு, பாடவிதானம், பாடக்குறிப்பு என்பன எழுதவேண்டுமெனவும் வலியுறுத்தினார். ''கோட்டக் கல்விப்பணிப்பாளர் பாலேந்திரா, பாடக்குறிப்பு, பாடவிதானம் எல்லாம் ஒழுங்காக உள்ளனவா என்பதில் கூடிய கவனமெடுப்பவர். குழுப்பரிசோதனையொன்று நடக்கும் என்றும் அறிவித்திருக்கிறார். எனது சேவையின் இறுதிக்காலத்தில் இக் கட்டான நிலைக்கு என்னை ஆளாக்கி விடாதீர்கள்''

ஆசிரியர் பொன்னம்பலத்தின் வாய்,',30 வருட சேவை செய்த எங்களையும் பாடக்குறிப்பு எழு



தச் சொல்லுகினம். வேறை வேலையில்லை....'' எனப் புறுபுறுத்தது.

''என்ன மிஸ்டர் பொன்னம்பலம் ஏதோ சொல்லுகின்றீர்கள் போலை?'' என அதிபர் கேட்க, ''ஓம், ஓம், பாடக் குறிப்புகள் எழுதுகிறது, எல்லாருக்கும் நல்லது தானே.'', என்று கூறிச் சமாளித்தார் பொன்னம்பலம். பக்கத்திலிருந்த ஆனந்தனின் வாயிற் புன்சிரிப்பு. ஈற்றில். அதிபர் புதுவருடத்திற்குரிய வகுப்பாசிரியர்களின் பட்டியலையும் வாசித்தார்.

10 B வகுப்பிற்கு மாஸ்டர் ஆனந்தன்! அந்த வகுப்பிற்குச் சமூகக்கல்வி எடுக்கும் பொன்னம்பலமும் தமிழ் எடுக்கும் சாம்பசிவமும் தங்களுக்கு அந்தப் பொறுப்பு இல்லையென்பதிற் பெரும் நிம்மதி அடைந்தனர்.

கூட்டம் முடிவடைந்தது.

ஆசிரியர்கள் கலையும் போது பொன்னம்பலம், ''உந்த 10 B பொடியளின்ரை தொல்லைகள் தாங்காமல் தானே, சுவாமிநாதன் வயது இருக்கக் கூடியதாக 44/90 இல் இளைப்பாறியவன்' என்றார்.

சாம்பசிவத்தார், ''இவன் பொடியன் வாத்திவேலையை விட்டிட்டு ஓடப்போறான், பாருங்களேன்,'' என்றார்.

சில ஆசிரியர்கள் ஆனந்தனை, வேள்விக்கு நேர்ந்து விட்ட ஆட்டைப் பார்ப்பது போலப் பார்த்தனர்.

* * *

நாள்கள் உருண்டோடின.

அதிபரின் அறையில் ஆனந்தன். ''என்ன மிஸ்ரர் ஆனந்தன் 10B பொடியளோடை கும்மாள மடிக்கின்றீராம்'' எனக் கடுகடுத்த முகத்துடன் கேட்டார் அதிபர்.

''சேர், அது வந்து அவங்களின்ரை வழியிலை போய்த்தான் அவங்களைத் திருத்த வேண்டும்,'' என்றான் ஆனந்தன்.

''நீர் இளம்பிள்ளை. கவனமாக நடக்க வேணும். அடுத்த வருஷம் அவங்களைப் பாஸ் பண்ணச் செய்வது உம்முடைய பொறுப்பு''

''எனக்கு நம்பிக்கை இருக்கிறது சேர்''-

அதிபரின் காரியாலயத்தை விட்டு, வெளியேறி ஆசிரியர்களின் அறையை நாடினான் ஆனந்தன்.

''அதிபரிடம் வாங்கிக்கட்டிக்கொண்டு வாறார் போலை கிடக்குது''- சாம்பசிவமும் பொன்னம்பலமும் பார்வையால் இந்தச் செய்தியைப் பரிமாறிக் கொண்டனர். ''தம்பி! இவர்கள் 10Bக்காரர், ஊரிலை திருவிழா, வெட்டு வேளாண்மையென்றால் பள்ளிக்கூடம் வரமாட்டார்கள். எங்கேயும் அடி தடியென்றால்

முன்னுக்கு நிற்பார்கள்'' என்ற சாம்பசிவம், தொடர்ந்து ''உவன் குழப்படிகாரப் பெடியன், மோகனைப் போய் மொனிட்டராக போட்டிருக்கின்றீர். இவனே வகுப்பைக் குழப்பிப் போடுவான்" என எச்சரிப்பதைப்போற் கூறினார்.

''அவனுடைய கெட்டித்தனங்களை, நல்ல வழியில் திருப்ப வேணும், அது தான் மொனிட்டர் வேலை கொடுத்தனான்'' என்றான் ஆனந்தன்

★ ★ ★

ஆண்டொன்று சென்றது.

ஆண்டு 10Bயில் கற்றவர்கள் அனைவரும் இவ்வாண்டு 11Bயிலிருந்தனர். ஆசிரியர்களும் பழையவர்களே.

ஆசிரியர்களின் அறையில் ஓய்வு நேர ஆசிரியர்கள் கல கல என்று கதைத்தபடி இருந்தனர். ஆனந்தனுக்கும் ஓய்வு நேரம் ஆனபடியால் சில கொப்பிகளைத் திருத்திக் கொண்டிருந்தான்.

அப்பொழுது 11B மொனிட்டர் - மோகன - வந்து ஆனந்தனிடம் "சேர் இன்று விஞ்ஞான சேர் வரவில்லை. ப்ரீயாக இருந்தால் நீங்கள் வந்து எங்களுக்கு கணக்குப படிப்பிக்கின்றீர்களா?" என்று கேட்டான்.

மகிழ்ச்சியுடன் ஆனந்தன் அங்கே சென்றான்.

உடனே பொன்னம்பலத்தார் ''பாரும் மிஸ்டர் சாம்பசிவம், இவ்வளவு நாளாய் நாங்களும் இருக்கிறம். இவன் எங்களைக் கேட்கவில்லை, முந்த நாள் வந்த ஆனந்தனை வகுப்பிற்கு வரச்சொல்லிக் கூப்பிடுகின்றான்" என்றார்.

''உமக்கென்ன விசரே, இந்த 'எக்ஸ்ரென்சன்' காலத்திலை உமக்கேன் மேலதிகவேலை? பேசாமல் இரும்" என்றார் சாம்பசிவம்.

காலம் உருண்டோடியது. க. பொ. த. முடிவுகள், திணைக்களத்திலிருந்து கிடைக்கப் பெற்றிருந்தன.

மாணவர் ஆரவாரமாக அங்கு மிங்குமாகக் கூடி நின்றனர்.

அதிபர் அறையில் சில ஆசிரியர்கள் குழுமியிருந்தனர். அதிபர் சிவபாதம், ''ஐ சே ஆனந்தன் உமது வகுப்பிலை, 38 பேரும் உயர்தரத்திற்குத்தகுதி பெற்றிருக்கின்றனர் எல்லாருக்கும் கணக்கில் C யும் D யும் தான்'' என ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியுடன் கூறி அவனைப் பாராட்டினார்.

ஆசிரியர் பொன்னம்பலமும் சாம்பசிவமும் விக்கித்து நிற்க ஆனந்தன் இபபோதும் ஒரு புன்னகையை உதிர்த்தான். ●

# புரிந்துணர்வு வேண்டும்

உண்மை நிலையை உணராமற் குறைகூறுவதால், நல்ல ஆக்க பூர்வமான செயற்பாடுகள் தடைப்படுகின்றன. கல்விச் செயற்பாடுகள் வெற்றியளிப்பதற்கு ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை ம. வி ஆசிரியர்.

## இ. ஸ்ரீ நடராசா

கல்விக்காக மாணவர்கள் என்றிருந்த நிலை மாறி, மாணவர்களுக்காகக் கல்வி எனும் உயர்ந்த நிலை உருவாகியுள்ள இந்த வேளையிலும் கூட கல்வியின் பயன் முழுமையாகப் பெறப்படாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதே. கல்வியோடு சம்பந்தப்பட்டவர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாமற் செயற்படுவதை முக்கியமான காரணங்களுள் ஒன்றாகக் கொள்ளலாம். மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர் ஆகியோர் சமூகச் சூழலில் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்பட வேண்டியவர்கள் ஆவர். அதிபர் இவர்களை வழிநடத்த வேண்டியவராகவும், கண்காணிப்பவராகவும் இருக்கிறார். மேற்கூறிய மூன்று பிரிவினரையும் புரிந்துணர்வுடன் செயற்பட வைப்பது அதிபரின் கடமைகளுள் ஒன்றாகும்.

கல்வி கற்பதற்காகத் தம் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கும் பெற்றோர் அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி அவர்களைப் புரிந்து கொள்ளவேண்டும். நல்ல சேவையை உடனுக்குடன் பாராட்டியும், திருப்தியீனங்கள் காணுமிடத்துச் சரியான முறையில் அணுகி அவற்றை நிவிர்த்தி செய்துகொள்ள வேண்டியதும் பெற்றோரின் கடமைகளுள் ஒன்றாகும். பெற்றோர் ஆசிரியர்களைச் சந்தேகக் கண்கொண்டு நோக்குமிடத்து, சில வேளைகளில் சரியான செயற்பாடும் தவறானதாகவே காணப்படும்.

ஒரு பாடசாலை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, அப் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினரும், பெற்றோருமாகிய இருவர் அதிபரிடம் ஏதோ அலுவலாக வந்தனர். அவர்கள் வகுப்பறை ஒன்றைக் கடந்து செல்லும்போது அந்த வகுப்பறையில் ஆசிரியர் தனது

கதிரையில் அமர்ந்திருக்க, சில மாணவர்கள் வகுப்பின் பின்புறமாக இருந்து நாணயங்களைச் சுண்டிக் கொண்டிருந்தனர். அங்கு சென்றுகொண்டிருந்த இருவரும் இதனைக் கண்டுவிட்டனர். அதிபரிடம் சென்ற அவர்கள் ''என்ன சேர், வகுப்பறையொன்றில் ஆசிரியர் இருக்கும்போதே மாணவர்கள் காசு சுண்டி விளையாடுகிறார்கள்'' என்று கேட்டார்கள். அதிபரும் தாம் பார்த்து வருவதாகக் கூறி அந்த வகுப்பறையின் பக்கமாகச் சென்று அவதானித்த பொழுது அந்த வகுப்பிற் கணித ஆசிரியர் இருந்ததைக் கண்டார். எட்டாம் ஆண்டு கணித பாடத்தில் ''நிகழ்தகவு'' என்ற அலகு இருப்பதையும், அதில் நாணயங்கள் சுண்டப் பெற்று தலை, பூ விழுவதைக் கணக்கிட வேண்டும் என்பதையும் புரிந்துகொண்ட அதிபருக்குச் சிரிப்புத்தான் வந்தது. அதிபரும் இதனைப் புரியாது அந்தஆசிரியரைக் கோபித்திருந்தால் நிலைமை மோசமாகி இருக்கும்;

வகுப்பறையிற் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவரையும் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.

கணித ஆசிரியர் ஒருவர் மிகவும் திறமையாகக் கணித பாடத்தைக் கற்பித்துக் கொண்டிருந்தார். அவர் மிகவும் கண்டிப்பானவர். மாணவர்கள் எல்லோரும் அமைதியாகவும், அவதானமாகவும் கவனித்துக் கொண்டிருந்தனர். உதாரணக் கணக்கு ஒன்றை விளங்கப்படுத்திய பின்னர், ஒரு மாணவியைக் கேள்வி கேட்டுக் கொண்டே அதனைக் கரும்பலகையில் எழுதி விட்டுத் திரும்பும்போது அந்த மாணவி தனது கொப்பியிற் பேனையால் ஏதோ எழுதுவதை அவதானித்து விட்டார். அந்தச்செயற்பாட்டை ஆசிரியரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தான் கூறுவதை அவதானிக்காது ஏதோ எழுதிக் கொண்டிருந்த அந்த மாணவியைத் திட்டித் தீர்த்ததோடு வகுப்புக்கு வெளியேயும் கலைத்துவிட்டார். உண்மையில் அந்த மாணவி மிகவும் அவதானத்தோடு இருந்து அந்தக் கேள்விக்கான விடையைப் பெற்றுக் கொள்வதற்காகவே கொப்பியில் எழுதிப் பார்த்துள்ளார்.

இதனை அந்த மாணவி பின்னர் வேதனையோடு கூறியபோது ஆசிரியர் தன்னையே நொந்து கொண்டார். இவ்வாறு அந்த மாணவியின் மனம் உடையும்படி செய்ததால் அன்றைய வகுப்பில் கற்பித்த விடயங்கள் எதையுமே அந்த மாணவியினாற் சரியாகக் கிரகித்துக் கொள்ள முடியவில்லை.

எனவே கல்விச் செயற்பாட்டுடன் தொடர்புடைய அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகிய ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் நன்கு விளங்கிக் கொண்டு தம் கடமைகளைச் செய்தல் வேண்டும். ஒவ்வொருவரும் மற்றவரிடம் காணப்படும் குறைபாடுகளை மறந்து, அவர்களிடமிருந்து பெறக்கூடிய உயர்ந்த பயன்களைப் பெறுவதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டால் கற்பித்தல், கற்றலினாற் பெறப்படும் பயன் நிறைவாகவே கிடைக்கும். ●

# ஆரம்ப வகுப்புக்களில் தமிழ்

*இன்று தமிழ் மாணவர்களுக்குத் தமிழிலேயே எல்லாப் பாடங்களும் கற்பிக்கப் படுகின்றன. இருந்தும் எழுத்துப் பிழை சொற்பிழைகளின்றி மாணவர்களால் எழுதமுடியாமலிருக்கின்றதே, ஏன்? விடை தந்து, விளக்கந் தந்து, நிலைமை மாற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் பாலர் கல்விக்கழகத்தைச் சேர்ந்த இக் கட்டுரையாளர்.*

சு. சந்திரபோஸ், B. A., Dip. Ed.

இலங்கையின் கல்விமுறையில், ஐந்து வயதினைப் பூர்த்தி செய்த பிள்ளைகளே ஆரம்பக் கல்வி ஆண்டு ஒன்றிற்குச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பள்ளிக்கு வருவதற்குமுன்பே பல பிள்ளைகள் 'மொண்டசரி' எனப்படும் முன்பள்ளி பாடசாலைக்குச் செல்கின்றனர். முன்பள்ளிக்குச் சென்ற பிள்ளைகளும், அத்தகைய பள்ளிக்குச் செல்லாத பிள்ளைகளும் தம் குடும்பக்கல்வித்தரம், பொருளாதாரவசதிகள், சமூகச்சூழலுக்கு ஏற்பத் தாயமொழி பற்றிய முன்னறிவுடன் வருகின்றனர். பெரும்பாலான பிள்ளைகள் தமது கருத்துக்களை ஆசிரியர்களிடமும், சகமாணவர்களிடமும் உரையாடல் மூலம் வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருப்பர். அன்றாடம் தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்து கொள்ளக் கூடிய பயன்படு சொற்களஞ்சியத்தைக் கொண்டிருப்பர். மொழியை எழுதும் ஆற்றலைக் கூடச் சில பிள்ளைகள் பெற்றிருக்கக்கூடும்.

தாய்மொழி தமிழை முன்பள்ளியிலோ, ஆரம்பப் பள்ளியிலோ அறிமுகப்படுத்தும் ஆசிரியர்கள் பின்வரும் விடயங்களை மிகக்கவனமாக மனங்கொள்ள வேண்டும். 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பதும், 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பதும், 'முதற் கோணல் முற்றும் கோணல்' என்பதும் தமிழ் சான்றோர் கூறிய அறிவுரைகளாகும்; அனுபவரீதியானதும் அறிவியல் ரீதியானதுமான கருத்துக்களேயாகும். அத்திபாரம் இன்றிக் கட்டிய கட்டுமானம் நிலைத்திருக்கமுடியாது. ஆரம்பக்கல்வியினைச் சரியான அடித்தளத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும். அதிலும் சிறப்பாகத் தாய்மொழிக் கல்வியினை எமது எதிர்காலச் சந்ததிக்குத் திறம்படக் கற்றுக் கொடுக்கும் சீரியசிந்தனையை ஆரம்பக்கல்வியில் ஈடுபடும் ஆசிரியர்கள் உள்வாங்கிக் கொள்ளவேண்டும். எரிகின்ற தீபத்தைக் கொண்டே வேறு தீபங்களை ஏற்றமுடியும். எனவே தாய்மொழியான தமிழ்

மொழியை ஆரம்பவகுப்பு மாணவர்க்குக் கற்பிக்கவேண்டிய பாடப்பரப்பில் ஆசிரியர்கள் பூரணபாண்டித்தியம் பெற்றிருக்கவேண்டும். இவ்வாறு கூறுதற்குக் காரணம் ஆரம்ப வகுப்புக்களில் தமிழ் கற்பிக்கும் சில ஆசிரியர்கள் தமிழ் நெடுங்கணக்கை ஒழுங்கு முறையாகத் தெரியாதவர்களாக இருப்பது அவதானிக்கப்பட்டமையே. இது கல்விக்கு ஓர் ஆரோக்கியநிலை அல்ல. தமிழில் இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்கள் இருப்பதனால் அனைத்தையும் நினைவில் வைத்தல் கடினம் என ஆசிரியர்கள் தம் வாதத்தினை முன்வைக்கலாம். தமிழில் மூல எழுத்துக்களான உயிர்பன்னிரெண்டையும், மெய்பதினெட்டையும் ஒழுங்குமுறையாகத் தெரிந்து வைத்திருப்பதன் மூலமும் உயிர்மெய் எழுத்துக்களின் பிறப்புமுறையினையும் அறிந்து கொள்வதன் மூலமும் தமிழ் நெடுங்கணக்கை மிக இலகுவில் நினைவில் வைத்துக் கொள்ளமுடியும். ஆரம்பவகுப்புக்களில் ஒழுங்கு முறையாகத் தமிழ் நெடுங்கணக்கினைக் கற்காத சிறுவர்கள் இடைநிலை, உயர்நிலைக் கல்வியில் தாய் மொழியை முதல் மொழியாகவும் கட்டாய பாடமாகவும் படிப்பதிற் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

ஆரம்ப வகுப்புக்களில் தமிழ் மொழி நெடுங்கணக்கை எழுத அறிமுகப்படுத்தும் பொழுது அண்மைக்காலங்களில் இலகுவாக எழுதக்கூடிய எழுத்துக்கள் ஆகிய ட, ப, ம ஆகியவற்றில் இருந்து ஆரம்பிக்கின்றனர். ஆனால் இலங்கையில் சிங்கள மொழியையோ, ஆங்கில மொழியையோ மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் பொழுது இடையிலிருந்து ஆரம்பிப்பதில்லை. ' சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம் வைத்ததொரு கல்வி மனப் பழக்கம்'' என்ற தமிழ் மரபுக்கு அமைய சிறு வயதிலேயே அகரத்திலிருந்து பிள்ளைக்கு ஒழுங்கு முறையாக எழுதிக் கற்பித்தால் பிள்ளை எல்லாவற்றையும் ஒழுங்காக எழுதப் பழகிவிடும். இடையிலிருந்து ஆரம்பிக்கப்படும் மொழிக்கல்வி, மாணவர் மொழியறிவில் வளர்ச்சி பெறத்தடையாக உள்ளது.

இன்று மொழி கற்பிப்பதில் பல புதிய புதிய உத்திகளும், கற்பிக்கும் சாதனங்களும் உருவாகியுள்ளன. 'கற்பிக்கும் முறைகள் மாறலாம் ஆயினும் கற்பிக்கும் விடயம் மாறமுடியாது' மாணவன் தாய்மொழி அறிவினை முறைப்படி பெறவேண்டும் என்ற இலக்கு மாறக்கூடாது. மொழியைச் சரியாக எழுத, வாசிக்க, பேசக்கற்பிக்க வேண்டும். ''பழையன கழிதலும் புதியது புகுதலும் காலவழுவல'' என்ற ஆன்றோர் வாக்கினை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதே வேளையில் புதியன என்பனவற்றையெல்லாம் வலிந்து



பொருத்தமற்ற விதத்தில் திணிப்பது அறிவு வளர்ச்சியாகாது. ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொருவகையானசிறப்பும் தனித்தன்மையும் உண்டு. அவ்வாறேதமிழ் மொழிக்கும் நீண்ட பாரம்பரியமும் சிறப்பும் தனித்தன்மையும் உண்டு. தமிழ்மொழியின் தனித்தன்மை குன்றாமல், அறிவியல் கருத்துக்களை எல்லாம் கூறும் ஆற்றல்மிக்க மொழியாக அது வளர்வதற்கு ஆரம்ப வகுப்பில் தமிழ்மொழியினைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மிக அவதானமுடன் கற்பிக்க முன்வரவேண்டும்.

வளர்ந்தவர்களுக்குத் தாய் மொழியல்லாத அன்னிய மொழிகளை இலகுவில், குறுகிய காலத்திற்குட் கற்பிப்பதற்காகக் கையாளப்படும் முறைகளை வளரும் சிறாருக்குத் தாய் மொழியைக் கற்பிப்பதற்குச் சிறந்த முறைகளாகக் கொள்ள முடியாது. இனிய சிறியசிறிய பாடல்கள் மூலம், கதைகள் மூலம், உரையாடல்கள் மூலம் எழுத்தறிவினை ஏற்படுத்தலாம். விளையாட்டுமுறைகள் மூலம் எழுத்துக்களை எழுதும் பயிற்சியினைக் கொடுக்கலாம். சிறுபராயத்திலேயே எழுத்துக்களை அவற்றிற்கு உரிய வடிவத்திலேயே எழுதப் பழக்கவேண்டும். எழுதுகோல்களையும் எழுதும் சாதனங்களையும் பிள்ளைகள் சரியான முறையிற் கையாளுகின்றனரா என்பதனை ஆசிரியர்கள் அவதானித்துச் சரியான கருவிக் கையாட்சியைப் பின்பற்றச் செய்யவேண்டும்.

பேச்சுமொழியினையும் அதனைப்பற்றிய அறிவு விருத்தியினையும் சிறுகதைகள், பாடல்கள், சிறுவர்களிடையே நடைபெறும் சிறிய சிறிய உரையாடல்கள் போன்றவற்றின் மூலம் மாணவர்களிடம் ஏற்படுத்தலாம். பேச்சு மொழியை மாணவர்கள் கற்கும்பொழுது மொழியைச் சரியாக உச்சரிக்கும் பயிற்சியினை ஆசிரியர் அவதானித்துக் கற்பிக்க வேண்டும். பிழையான உச்சரிப்பு, பிழையாக மொழியினை எழுத வழிவகுக்கும். தாய்மொழியை உச்சரிப்பதில் ஒவ்வோர் எழுத்துக்குமுரிய ஒலிகளுக்கு ஏற்ற சரியான உச்சரிப்பினை ஆசிரியர்கள் பயிற்றுவிக்க வேண்டும். உசசரிப்பு வேறுபடும் பொழுது பிள்ளைகளின் எழுத்து மொழியிற் பிழைகள் மலிவதனை அவதானிக்க முடிகின்றது. சிறுபருவத்திலே சரியான வழிகாட்டுதல் இன்மையால் கனிஷ்ட இடைநிலைகளிலும், உயர்நிலைக் கல்வியிலும் மொழியைச் சரியாக எழுதுவதில் மாணவர்கள் இடர்ப்படுகின்றனர். ஒலிமயக்கம் விளைவிக்கும் ந,ண, ன, லழள, ற,ர,ட. எழுத்துக்களின் சரியான ஒலிகளை அறியாமையினால் வாக்கியம் அமைக்கும் பொழுது சொற்கள் தரவேண்டிய பொருள் மாறுபாடடைகின்றது. ஒளி என்பதனை ஒலி எனவும், கிளி என்

பதைக் கிலி என்றும் அரம் என்பதை அறம் எனவும் உயர் வகுப்புக்களில் எழுதக் காண்கின்றோம். இதற்குக் காரணம் ஆரம்பவகுப்புகளிற் சரியான வழிகாட்டல் இன்மையே ஆகும்: சிறுவயதில் பிள்ளைகள் எந்த விடயத்தையும் அப்படியே பாவனை செய்யும் திறனை உடையன. ஆகவே ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் மொழியைச் சரியாக உச்சரித்துக் காட்டி, எழுதிக்காட்டிக் கற்பித்தால் பிள்ளைகள் அப்படியே அதனைச் சரியாகப் பின்பற்றும். மேல் வகுப்புக்களிலும் இப்பிழைகள் வாராமற் தடுக்க முடியும்.

இலங்கையில் இன்று சில நகர்களில் தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட பிள்ளைகளை ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படும் முன்பள்ளிக்குப் பெற்றோர் அனுப்புகின்றனர். அத்துடன் வீட்டு மொழியாக ஆங்கிலத்தைப் பேசி வருகின்றனர். இதனையே நாகரிகம் என்றும், அறிவு வளர்ச்சி என்றும் நம்புகின்றனர். இப்படியாக ஆரம்பக் கல்வியில் தாய்மொழிக் கல்வி மாற்றான்தாய் மனப்பாங்குடன் ஊட்டப்படுகின்றது. இதன் பின்னர் இலங்கையின் கல்வித் திட்டப்படி இடைநிலை, உயர் நிலைக்கல்வி தாய் மொழி மூலம் கற்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதனாலும் க. பொ. த சாதாரண பரீட்சையிற் கட்டாய பாடமாகத் தமிழ் இருப்பதனாலும், இவ்வாறு வழிகாட்டப்பட்ட மாணவர்கள் படும் இடர்களை நகர்புறப் பாடசாலைகளிற் காணக்கூடியதாக உள்ளது. இதன் விளைவுகளை காலம் கடந்த ஞானமாகப் பெற்றோர் பின்னரே உணர்கின்றனர். ஆங்கிலம் கற்பதோ வேற்று மொழிகளைக் கற்பதோ தவறில்லை. ஆனால், தாய் மொழியைப் புறக்கணிப்பதோ, கற்காமல் விடுவதோ தம்மைத் தாமே தாழ்த்திக்கொள்வதாகும். "மாற்றான் தோட்ட மல்லிகைக்கும் மணமுண்டுதான்". ஆனால் முற்றத்துமல்லிகைக்கு மணமில்லாமற் போய்விடுமா-?

ஆரம்ப வகுப்புகளிலே தாய் மொழியாம் தமிழைக் கற்பித்தல் என்பது மிக இலகுவான காரியம் அல்ல. ஆயினும் அப்பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு ஒரு தார்மீகக் கடமையுண்டு. "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்பதை மனத்திலிருத்தி பிள்ளைகளின் பல்வேறுபட்ட குடும்பச் சூழல், பெற்றோர் மனப்பாங்கு, பிள்ளைகளின் ஆர்வமும் ஆற்றலும், அரசின் கல்விக் கொள்கைகள் ஆசிரியரின் சமூக பொருளாதார நிலைகள் போன்ற பல்வேறு சாதக பாதக நிலைகளின் நடுவே ஆரம்பக்கல்வியில் ஈடுபடும் ஆசிரியர்கள் தமக்குத் தரப்பட்டுள்ள பொறுலனைச் சிறந்த சமூகப்பணியாகவும் வரலாற்றுக் கடமையாகவும் கொண்டு சிறாருக்குச் சிறந்த வழிகாட்டிகளாகத் திகழவேண்டும். ●

# எளிய முறையில் நிறையக்கற்போம்

கணிதபாடத்திற் கேத்திர கணிதப்பகுதியும் முக்கியமானது. அடிப்படை அறிவு இல்லாத காரணத்தால் மாணவர்கள் பலர் அப்பகுதியைப் புறக்கணிக்கின்றனர். அடிப்படை உண்மைகளை அவர்களுக்கு இலகுவில் விளக்குவதற்குப் பொருத்தமான உபகரணங்களை இங்கே அறிமுகஞ் செய்கின்றார் கோப்பாய்-கணித விஞ்ஞான மூலவள நிலையப்பொறுப்பாளர்.

**அருளீஸ்வரி வேதநாயகம்**

கேத்திர கணிதம் என்பது எமது மாணவர்களுக்குக் கசப்பான ஒன்றாக அமைந்துவிட்டது. எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆண்டு 11ல் கற்கும் 522 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட கணிதப் பரீட்சையிற் கேத்திர கணித வினாவிற்குரிய பெறுபேறு பின்வருமாறு அமைந்தது.

50% மேற் புள்ளி பெற்றோர்-07
50% ற்குக் குறைந்த, ஆனால்
0 ற்கு மேல்—23
00 ஐப் பெற்றோர்—190

302 பேர் வினாவைத் தெரிவு செய்யவேயில்லை. ஆகவே, கேத்திர கணிதத்திலே மாணவருக்கு ஆர்வம் ஏற்படும் வகையிற் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.


கோணத்திலிருந்து, சமகோண முக்கோணிவரை கேத்திர கணித உண்மைகளை மாணவர்கள் ஆர்வத்துடன் அறிந்துகொள்வதற்கு உதவும் எளிய உபகரணத் தொகுதியொன்றை அறிமுகஞ் செய்வதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கேத்திர கணிதத்தின் அடிப்படை உண்மைகளைத் தெளிவாக அறிந்துகொண்ட ஒரு மாணவன் எண்கொண்ட பயிற்சிகளைச் செய்து, பின், முறையான நிறுவல்களுக்கு இட்டுச் செல்லப்படும்போது, தன் ஆற்றலுக்கு ஏற்ப, தன் கேத்திர கணித அறிவை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவான்.

வகை 1இல் 4 சட்டங்களையும் வகை 2இல் 2 சட்டங்களையும் வகை 3 இல் 6 சட்டங்களையும் எடுத்துக்கொள்க. அத்துடன் 6 ஆணி நட்டுக்களையும் சட்டங்களிற்கேற்றாப்போல இருபாகைமானிகளையும் பெற்றுக் கொள்க.

இப்பொழுது வகை 1 இல்2 சட்டங்களை எடுத்து ஆணியால் பொருத்தி

(i) சுழற்சியால் கோணம் உண்டாதல்.

(ii) கோணத்தின் வகைகள்.




(iii) கோணத்திற்குப் பெயரிடுதல் ஆகிய விடயங்களை இலகுவாக விளங்கப்படுத்த முடியும்.

வகை 1 இல் 4 சட்டங்களை ஆணியால் பொருத்தி ஏற்ற வகையில் பயன்படுத்துவதன் மூலம்.




(i) ஒரே உச்சிக்கோணங்கள்.

(ii) அடுத்துள்ள கோணங்கள் என்பவற்றைக் கற்பிக்கலாம்.

வகை 2இல் 2 சட்டங்களை உரியவாறு பொருத்தி பாகைமானியின் உதவியுடன் குத்தெதிர் கோணங்கள் சமன் என்றவிடயத்தை மாணவரை அவதானிக்கச் செய்வதன்மூலம் கற்பிக்கலாம்.

பொதுவாக மாணவர்கள் இரண்டு நேர்கோடுகள் ஒன்றையொன்று வெட்டாத சந்தர்ப்பத்திலும் குத்தெதிர் கோணங்கள் சமன் எனக்கூறுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.




செயற்பாடு I

அடுத்துள்ள கோணங்கள் கற்பிப்பதற்காகப் பயன்படுத்திய உபகரணத்தையும் குத்தெதிர் கோணங்கள் சமன் என்பதைக் கற்பிக்கப்பயன்படுத்திய உபகரணத்தையும் ஒன்றாகப் பயன்படுத்துவதன் மூலம் இக்குறைபாட்டிற்குப் பரிகாரம் தேடலாம்.

மேற்படி இரு செயற்பாடுகளிலும் பாகைமானியின் உதவியுடன் கோணங்களை அளந்து தெளிவை ஏற்படுத்தலாம்.

வகை 2 இல் இரு சட்டங்களையும் வகை 3 இல் ஒரு சட்டத்தையும் படத்தில் காட்டியவாறு பொருத்துக.

இதனைப்பயன்படுத்தி இரு நேர்கோடுகளை ஒரு குறுக்கோடு வெட்டும்போது உண்டாகும் கோணங்களை அறிமுகஞ்செய்வதுடன் நேர்கோடுகள் சமாந்தரமாக இல்லாதபோது:



செயற்பாடு II


(i) ஒத்த கோணங்கள் சமனில்லை.

(ii) ஒன்றுவிட்ட கோணங்கள் சமனில்லை.

(iii) நேயக்கோணங்களின் கூட்டுத்தொகை 180° க்குச் சமனாகாது.

என்ற கருத்து பதியும் படியாகக் கோணங்களை அளந்து அவதானிக்கச்செய்வதன் மூலம் மாணவர்களிற்குத் தெளிவுபடுத்தலாம்.

கோணங்கள், நேயக்கோணங்கள் உண்டாவதில்லை, என்ற கருத்தையும் வேறோர் பகுதியினர் சமாந்தரமற்ற இருகோடுகளை குறுக்கோடி வெட்டுவதால் உண்



இரு நேர் கோடுகளையும் சமாந்தரமாகச் சரி செய்வதன் மூலம் இப்போது ஒத்த கோணங்கள் சமனாவதையும்ஒன்றுவிட்ட கோணங்கள் சமனாக அமைவதையும், நேயக்கோணங்களின் கூட்டுத்தொகை 180° ஆக அமைவதையும் தெளிவாக்க முடியும்.

ஆண்டு 7 இல் கற்க ஆரம்பிக்கும் இவ்விடயத்திலே ஆண்டு11 இல் ஒரு பகுதி மாணவர்கள் இரு சமாந்தரமற்ற நேர்கோடுகளை ஒரு குறுக்கோடிவெட்டும்போது ஒத்தகோணங்கள் ஒன்றுவிட்டடாகும் ஒத்தகோணங்கள் சமன், ஒன்றுவிட்ட கோணங்கள் சமன் நேயக்கோணங்களின் கூட்டுத்தொகை 180° எனத் தவறாக கருதுவதையும் எம்மால் அவதானிக்க முடிகின்றது. தகுந்த உபகரணப் பயன்பாட்டுடன் தெளிவாகக் கற்பிப்பதால் இக் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

இதே உபகரணத்தொகுதியினைக்கொண்டு ஏனைய ஆண்டுகளிலும் கற்பிக்கவல்ல பாடவிடயங்களைப் பற்றி அடுத்த இதழ்களில் ஆராய்வோம். ●

# அகில உலக ஆசிரியர் நாள் தொடர்பான

# சிறுகதைப் போட்டி

*முதலாம் பரிசு: ரு. 1000 /-*
*இரண்டாம் பரிசு: ரு. 750 /-*
*மூன்றாம் பரிசு: ரு. 500 /-*

1. இப்போட்டியில் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வித்திணைக்கள அலுவலர்கள் போன்றோர் கலந்துகொள்ளலாம்.

2. சிறுகதைகள், ஆசிரிய வாண்மையையும், சமூக மதிப்பையும் மேம்படுத்தும் வகையில் அமைவது விரும்பத்தக்கது; எனினும் தமிழீழக் கல்விப்புலம் சம்பந்தமான எந்தக்கதையும் பரீசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்,

3. கதைகள் தாளில் ஒரு பக்கத்திற் தெளிவாக எழுதப்பட்டோ, தட்டச்சிற் பொறிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்; புல்ஸ்காப்தாளில் மூன்று பக்கங்களுக்குக் குறையாமலும் ஏழு பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. எழுதுபவரின் பெயரோ, புனைபெயரோ, முகவரியோ கதைப் பிரதியில் இடம்பெறக்கூடாது. இவற்றைத்தனித்தாளில் கதை எழுதி. தம் சொந்தக் கற்பனையில் உருவானது என்பதையும் தழுவலோ மொழிபெயர்ப்போ அன்று என்பதையும், ஏற்கனவே பிரசுரிக்கப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கதைப்பிரதியுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

5. மேலுறையின் இடப்பக்கமேல் மூலையிற் சிறுகதைப் போட்டி எனக்குறிப்பிட்டு 1994-09-20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ''விளக்கு'' அலுவலகத்திற் கிடைக்கும்படி கதைகள் அனுப்பப்பட வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:

**விளக்கு அலுவலகம்,**
**689. காங்கேசன்துறைச்சாலை,**
**யாழ்ப்பாணம்.**

## காற்றில்

யாழ். இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி போன்றவற்றின் மாணவர்கள், எட்டு "டீ" யும் நான்கு "ஏ" யும் எடுத்தால், அவ்வக் கல்லூரிச் சமுதாயம் பெருமைப்படலாம். கல்விப் பணிப்பாளர் என்ற முறையில் நான் பெருமைப்பட முடியாது; எனது வலயத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலையும் நல்ல பெறுபேறுகளைப் பெறுவதே முக்கியமானது.

செல்வி தி. பெரியதம்பி
யாழ் - தெற்கு வலயக்
கல்விப் பணிப்பாளர்

★ ★

பல்கலைக் கழகம் எந்த ஒருதனி நபரினதும் சொத்தன்று என்பதை ஒவ்வொருவரும் மனதில் இருத்த வேண்டும்; பல்கலைக் கழகத்தை ஒரு தொழில் நிறுவனமாகக் கருதி எவரும் செயற்படவும் கூடாது. பரந்துபட்ட நோக்குடனும் சிறந்த அர்ப்பணிப்புடனும் பல்கலைக் கழக ஆசிரியர்களும் ஊழியர்களும் சேவையாற்ற வேண்டும். இன்றைய காலகட்டத்தில் மட்டுமல்லாமல், எந்நாளும் நமது சமுதாயத்துக்கு நலம் செய்யக் கூடிய பெருந்தொண்டு இதுவே.

பேராசிரியர்
க. குணரட்ணம்
யாழ். பல்கலைக் கழகத்
துணைவேந்தர்

★ ★

அறிஞர்களின் ஆராய்ச்சிகளும், நூல்களும் அரிய பொக்கிசங்களாகும். அவற்றை எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்க வேண்டும்.

பேராசிரியர் சிவசாமி
யாழ். பல்கலைக் கழக
சமஸ்கிருதத்துறைத் தலைவர்

★ ★

## மிதந்து . . .

ஒவ்வொரு பாடசாலையிலும் ஆங்கில மொழியை வளர்க்க வேண்டும். மாணவர்கள் மத்தியில் ஆங்கில மொழி வளர வேண்டும். ஆங்கிலம் ஒரு சர்வதேசமொழி, இம்மொழியை நாம் கற்றுக் கொள்ளாவிட்டால் சர்வதேச ரீதியில் முகம் கொடுப்பது கடினமானதாக இருக்கும்.

திரு வே. தி செல்வரட்ணம்
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
பருத்தித்துறைக்கல்விக்கோட்டம்



## காதில் . . .

ஆசிரியர்கள், அதிபர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் மாணவர்களை முழுமனிதர்களாக்க வேண்டும். மாணவர்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற புத்தி ஜீவிகளாக உருவாக வேண்டும். அப்போதுதான் அவர்கள் தங்களைத் தாங்களே வழிநடத்துவதோடு போராட்டத்திற்கும் உறுதுணையாகவும் நிற்பார்கள்

திரு பொன். தியாகம்
தமிழீழ மாவீரர் பணிமனைப்
பொறுப்பாளர்

★ ★

மாணவர்கள் கல்வியுடன் விளையாட்டுத் துறையிலும் முன்னணியில் திகழவேண்டும். அப்போதுதான் முழுமையான அறிவைப் பெற்று திடகாத்திரமான பிரசைகளாக வரமுடியும்

திரு. ச. செல்வராசா
வடமராட்சி கிழக்கு
பிரதிக்கல்விப் பணிப்பாளர்

★ ★

அநேகமான மாணவர்கள் காலை உணவு அருந்தாமல் பாடசாலைக்கு வருகின்றனர். அவர்களுட் சிலர் தாய், தந்தையரை இழந்த நிலையில் உள்ளவர்கள். சில மாணவர்கள் வயிற்றுவலி காரணமாகப் பாட

## நுழைந்து . . .

சாலையில் இருந்து இடைநடுவில் வீட்டுக்குச் சென்று விடுகின்றனர். போஷாக்கிஇமையே இதற்கு காரணமாகும்.

திரு. கா. சந்திரபாலன்
அதிபர்.
சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி

சிறுவர்களை எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கச் செய்யுங்கள். மரங்களுக்குச்சூரியகிரணங்களைப்போல், சிறுவர்களுக்கு மகிழ்ச்சி அவசியம். களிப்பின்றி குழந்தைகள் வளர மாட்டார்கள். வெறும் எண்ணும் எழுத்தும் படிப்பும் போதிப்பது, சூரிய வெளிச்சமில்லாத மரத்திற்கு எரு போடுவது போலாகும்.

- ராஜாஜி

அகில உலக ஆசிரியர் நாள் தொடர்பான

# சிறுவர் நாடக எழுத்துரு ஆக்கப் போட்டி

முதலாம் பரிசு ரூபா 1000-00
இரண்டாம் பரிசு ரூபா 750-00
மூன்றாம் பரிசு ரூபா 500-00

| பிரிவு | இலக்குப் பார்வையாளர் | நேரம் | நாடகவகை |
|---|---|---|---|
| I | ஆண்டு 2—3 மாணவர் | 15 நிமிடம் | சிறுவர் நாடகம் |
| II | ஆண்டு 4—6 ,, | 20 ,, | சிறுவர் நாடகம் |

★ நாடகம் என்பது நடிப்பதற்குரியதே என்பதால் மேடையேற்றத்திற்கு உகந்த அம்சங்கள் அனைத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

★ நாடக எழுத்துருக்கள் அனைத்தும் குறித்த ஆண்டுப்பிரிவினரை இலக்குப் பார்வையாளராகக் கருதி அவர்களின் ஆளுமை, உள முதிர்ச்சி, அனுபவ எல்லை என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஆக்கப்பட வேண்டும்.

★ ஒவ்வொரு பிரிவினருக்கும் என ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள், மேடைத் தயாரிப்பு இருக்கக் கூடியதாக அமையவேண்டும்.

★ ஒவ்வொரு வயதுப்பிரிவிற்கான எழுத்துரு ஆக்கத்திற்கும் தனித்தனியான பரிசில்கள் வழங்கப்படும்.

★ நாடகப் பிரதியில், எழுதியவரின் பெயரோ முகவரியோ இடம் பெறக்கூடாது. இந்த விபரங்களையும் நாடகம் எந்தப் பிரிவுக்கு உரியது என்பதையும் நாடகம் தன் சொந்தக் கற்பனை என்பதையும் அது மொழிபெயர்ப்போ தழுவலோ அன்று என்பதையும் முன்னர் அச்சில் வெளிப்படவோ மேடையேற்றப்படவோ இல்லை என்பதையும் தனித்தாளில் எழுதிப் பிரதியுடன் இணைத்துஅனுப்ப வேண்டும்.

★ மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் சிறுவர் நாடக எழுத்துரு ஆக்கப்போட்டி எனக்குறிப்பிட்டு 1994-09-20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

**அனுப்பவேண்டிய முகவரி:**

சிறுவர் நாடக எழுத்துரு ஆக்கப்போட்டி
விளக்கு பணிமனை
689, காங்கேசன்துறைச்சாலை,
யாழ்ப்பாணம்.

# விளக்கு

## சந்தா விபரம்

**ஓராண்டுச் சந்தா ரூ. 160/-**
**அரையாண்டுச் சந்தா ரூ. 80/-**

சந்தாதாரராக விரும்புவோர் கீழேயுள்ள படிவத்தை நிரப்பி அனுப்பிப் பணத்தைக் காசுக்கட்டளை மூலமோ அல்லது நேரிலோ எமக்குக் கிடைக்கச் செய்யுங்கள்.

நிர்வாகி,
விளக்கு பணிமனை,
689, காங்கேசன்துறைச் சாலை,
யாழ்ப்பாணம்.

பெயர்: ____________________

முகவரி: ____________________

____________________

அனுப்பப்படும் தொகை: ரூபா 160/- ரூபா 80/-

____________ ____________
காசுக்கட்டளை இலக்கம் ஒப்பம்

# விளக்கு

வைகாசி — ஆனி — ஆடி — 1994

## உள்ளே உள்ளவை

தெளிவான பாதையின் வழிகாட்டியானவன் — ஆசிரியர் தலையங்கம்

வளர்ச்சிப் பாதையில் — எஸ். சுப்பிரமணியம்

சம்பளத்திட்டம் — த. மகாசிவம்

ஆசிரியரும் தொழில்சார் உளநிறைவும் — கலாநிதி சபா. ஜெயராஜா

ஆண்டு 10B — வண்ணை சே. சிவராஜா

நான் விரும்பும் ஆசிரியர் — வ. யோகானந்தசிவம்

'பா'ரதத்தில் துணைவேந்தர்

நான் விரும்பும் ஆசிரியர் — கா. முத்துக்கிருஷ்ணன்

புரிந்துணர்வு வேண்டும் — இ. ஸ்ரீ நடராசா

ஆரம்ப வகுப்புக்களில் தமிழ் — சு. சந்திரபோஸ்

எளியமுறையில் நிறையக்கற்போம் — அருளீஸ்வரி வேதநாயகம்

சிறுகதைப்போட்டி

காற்றில் மிதந்து காதில் நுழைந்து ......

நாடக எழுத்துருப்போட்டி

---

யாழ். மகேந்திரா வீதி. தாசன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஆசிரிய வாண்மை விருத்திக் குழுவினரால் வெளியிடப்பட்டது.

ஆசிரியர்; சி. சிவசரவணபவன்

துணையாசிரியர்: க. வை. தனேஸ்வரன்

அலுவலகம்: 689, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம்.